ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

05-07-2006 - மலர் 03, இதழ் 17



## டா வின்ஸி சர்ச்சை...

## 'அப்பிள்' கதை

## மீண்டும் டிஸ்கவரி...

விலை ரூபா 10/=

பன்முக அறிவியல் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்




தயாரிப்பு - நவசீலன்

# கனியாக உருவெடுத்த அரக்கன்



அகத்தியர் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டதும் இல்வலன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். "நல்ல பிராமணர் வந்து சிக்கியிருக்கிறார். இன்று இவரின் கதையை முடித்து விருந்து உண்ணலாம் என்று மனதுக்குள் மகிழ்ச்சியடைந்து கொண்டான் இல்வலன்.

அகத்தியரை வரவேற்று உபசரித்தான். வழக்கப்படி விருந்துக்கான ஏற்பாட்டைச் செய்தான் இல்வலன். வாதாபியை அழகிய கனியாக உருவெடுக்கச் செய்து அவருக்கு விருந்து படைத்தான். அகத்தியரும் அதனைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து "ஆஹா அழகான கனி, இன்றுதான் கனிந்திருக்கிறது போல் தெரிகிறது" என்று மிகுந்த முகமலர்ச்சியுடன் இல்வலனைப் பார்த்துக் கூறினார்.

"ஆமாம், சுவாமி தங்களுக்காகவே விசேடமாக இந்தக் கனியைக் கொண்டு வரச்செய்தேன். திருப்தியாக உண்ணுங்கள்" என்று கூறினான்.

அகத்தியரும் அந்தக் கனியை சுவைத்துச் சாப்பிடலானார். அவர் சாப்பிட்டு முடிந்ததும் இல்வலன் "வாதாபி வா. சீக்கிரம் வெளியே வா" என்று குரல் கொடுத்தான்.

முனிவரோ வயிற்றைத் தடவியபடி "வாதாபியே! உலகம் சாந்தியடையட்டும். ஜீரணாதி" என்று கூறினார்.

இல்வலன் "வாதாபி வா வா" என்று பலமுறை அழைத்த போதிலும் முனிவர் ஒவ்வொரு முறையும் ஜீரணாதி என்று கூறி வயிற்றைத் தடவினார்.

அந்தமட்டில் வாதாபி அகத்தியர் வயிற்றில் ஜீரணமாகிவிட்டான். பின்னர் அகத்தியர் இல்வலனைப் பார்த்து "நீ எவ்வளவு கத்தினாலும் பயனில்லை. வாதாபி ஜீரணமாகி விட்டான்" என்று கூறினார்.

தம்பியை இழந்த சோகம் இல்வலனை வாட்டிய போதும், அகத்தியரின் சக்தியைக் கண்டு பெரும் ஆச்சரியம் அடைந்தான். அவன் அகத்தியரை கைகூப்பி வணங்கினான்.

பின்னர் அகத்தியர் கேட்ட தனத்தைக் கொடுத்து அனுப்பினான்.

தனத்தைப் பெற்றுக் கொண்ட அகத்தியர் மனைவி லோபாமுத்திரையை அடைந்து அவள் கேட்டதையெல்லாம் கொடுத்து அவளை திருப்திப்படுத்தினார்.

பின்னர் அகத்தியர் லோபாமுத்திரையிடம் "உனக்குப் பத்து நல்ல மக்கள் வேண்டுமா? அல்லது பத்துப்பேரை வெல்லக்கூடிய ஒரு மகன் வேண்டுமா?" என்று கேட்டார்.

அதற்கு லோபாமுத்திரை, "சுவாமி, புகழுக்குரிய அறிவைப் படைத்தவனும், தர்மத்தில் நிலை கொண்டவனுமான ஒரு மகனையே பெறவிரும்புகிறேன்" என்று கூறினாள்.

அதன்படியே அவள் புதல்வனைப் பெற்றதாக அகத்தியர் கதை கூறுகிறது.




## வாசகர் அறிவுப்போட்டி இல: 5

வாசகர் அறிவுப்போட்டி இலக்கம் 5 இற்கான கேள்விகள் இங்கு வெளியாகின்றன. இக்கேள்விகள் கடந்த ஜுன் மாதம் வெளியான இதழ்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன. இவற்றுக்குச் சரியான விடை எழுதுபவர்களில் அதிர்ஷ்டசாலிகள் மூவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்குப் பெறுமதி மிக்க கல்குலேட்டர் (Calculater) அல்லது டி.வி கேம்ஸ் (T.V. Games) பரிசுகளாக வழங்கப்படும்.

- இப்போட்டி ஒவ்வொரு மாதமும் நடைபெறுவதுடன் கேள்விகள் அதற்கு அடுத்த மாதத்தின் முதல் வாரத்தில் பிரசுரிக்கப்படும்.
- மாபெரும் பரிசுப் போட்டி பற்றிய விபரங்கள் பின்னர் வெளியிடப்படும்.

### வாசகர் அறிவுப்போட்டி இலக்கம் 5 இற்கான வினாக்கள்

1. அயனமண்டல மழைக்காடுகளில் அதிகம் காணப்படும் மரங்கள் எவை?
2. இலங்கையில் திறந்த பொருளாதார முறை எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
3. தண்ணீர் மூன்று பிழை பொறுக்குமென்றால் என்ன?
4. புகையிலை எதிர்ப்பு தினம் எது?

விடைகளைச் சரியாக இலக்கமிட்டு அஞ்சலட்டையில் எழுதி அனுப்புங்கள். போட்டி முடிவு திகதி 20-07-2006.

அனுப்ப வேண்டிய முகவரி :

வாசகர் அறிவுப்போட்டி இல: 5,
'விஜய்' ,
த.பெ.இல : 2037,
கொழும்பு.

### வாசகர் அறிவுப்போட்டி இலக்கம் 4 முடிவுகள்

விடைகள்

1. 'அல்ப்ஸ்' வலயம் என்றால் ஜெர்மனியிலுள்ள மலைப்பிரதேசம்.
2. 1000 ரூபா இலங்கை தாள் நாணயம் 1981 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது.
3. ஒரு நாட்டின் முதுகெலும்பாகக் காணப்படும் வளம் அந்நாட்டின் இயற்கைவளம்.
4. பிரான்சியப் புரட்சி 1789 ஆம் ஆண்டு ஏற்பட்டது.

சரியான விடைகளை அனுப்பிப் பரிசுக்குரியவர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் விபரம் வருமாறு :-

எம்.என்.எம். ரைஸனா,
32, ஸாவியா ரோட், ஹேனமுல்ல,
கெசல்வத்தை, பாணந்துறை.

க.விசாகன்,
56, சந்தனமாதா கோவில் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

வி.எஸ்.ரோஷன்,
ரதெல்ல தோட்டம், நானு ஓயா.

இவர்களுக்கான பரிசுகள் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தால் மட்டுப்பாடுகளும் வைக்கப்பட்டிருக்கும்

Vijey விஜய்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
இல:08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02
தொலைபேசி: 2314714, பெக்ஸ்: 2314968

இன்று உலகமெங்கும் மிக அதிகமாகப் பேசப்படும் வார்த்தைகள் 'சுதந்திரம்' மற்றும் 'உரிமை' ஆகிய வார்த்தைகள். தனி மனித உரிமைகளும், தனி மனித சுதந்திரங்களும் பெரிதாக மதித்துப் போற்றப்படுகின்றன. உரிமைகளும், சுதந்திரங்களும் பறிக்கப்பட்டால் தனி மனிதர்களும், தொழிற்சங்கங்களும், அரசியல் கட்சிகளும், பல்வேறு உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் அமைப்புகளும் அதற்கெதிராகப் போராடுகின்றன. நாடுகளில் உரிமைப் போராட்டங்கள் நடைபெறுகின்றன.

ஆனால், ஒருவனுக்கு எந்த அளவுக்கு சுதந்திரம் அல்லது உரிமை கொடுக்கலாம் என்பதில் பலரும் பல்வேறு வித கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். காட்டுக்கழுதைக்கு (Wild Ass) வழங்கப்பட்டிருக்கும் சுதந்திரம் யாருக்கும், எதற்கும் வழங்கப்படலாகாது என்பது பலரது கருதது. உரிமைகளுக்கு மட்டுப்பாடுகள் விதிக்கப்படல் அவசியம் என்பது மேலும் பலரது அபிப்பிராயம். இப்படி உரிமைகள்,, சுதந்திரங்களுக்குக் கட்டுப்பாடுகள் இருக்கக்கூடாது என்பதும், இல்லை அவற்றுக்கு வரம்புகள் இருக்க வேண்டும் என்பதும் ஒரு சட்டக்கோட்பாட்டின் வழி வந்ததாகும்.

முன்பு ஒரு சட்ட அறிஞர் கூறினார், எங்கெல்லாம் கட்டற்ற சுதந்திரமும், அளவற்ற உரிமைகளும் வழங்கப்படுகின்றதோ அங்கெல்லாம் அவற்றை மீறுதலும், துர்ப்பிரயோகம் செய்தலும் இடம்பெறும் ஆதலால், அவற்றுக்கு வரன்முறைகளும், கட்டுப்பாடுகளும் கண்ணுக்குப் புலப்படாமலேயே வைக்கப்பட்டிருக்கும். இதனை மறு விதத்தில் கூறுவதாயின் எங்கெல்லாம் வரம்பு மிகுந்த அதிகாரம் ஒருவரிடம் இருக்கிறதோ அங்கெல்லாம் அதிகார மீறலும், துர்ப்பிரயோகம் செய்யும் தன்மையும் இருந்து கொண்டே இருக்கும்.

''உனது சுதந்திரம் எனது மூக்கு நுனி வரையில் தான்'' என்பது மேலைநாட்டுப் பழமொழி. வீதியில் உங்கள் கைத்தடியை முடிந்தவரை வேகமாகச் சுழற்றிக் கொண்டு செல்லும் உரிமை உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால், அந்தக் கைத்தடி எதிரில் வரும் எனது மூக்கைப் பதம் பார்த்து விட்டால் உங்களை நீதிமன்றத்துக்கு அழைத்து நட்டஈடு கோரும் உரிமை எனக்கு வந்துவிடும். அல்லது இலங்கை தண்டனைச் சட்டக்கோவைப் பிரிவு ¾ கீழ் காயம் விளைவித்தமைக்காக ஒரு வருட சிறைத்தண்டனை அல்லது ஆயிரம் ரூபா தண்டப்பணம் அல்லது இவை இரண்டுக்கும் உங்களைப் பொறுப்பாக்க முடியும்.

ஆதலால், உரிமை அல்லது சுதந்திரம் வழங்குதல் என்பதல்லப் பிரச்சினை. அதனை ஒருவர் எந்த அளவுக்கு பயன்படுத்த வேண்டும் என்பதனை அவரவர் உணர்ந்திருக்க வேண்டும் என்பது தான் பிரதான தேவைப்பாடு; எனவே, தான் உரிமைகள், அதிகாரங்கள், சுதந்திரங்கள் வழங்கப்பட்டிருக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் அதற்கான மட்டுப்பாடுகளும் உட்கிடக்கையாக வைக்கப்பட்டிருக்கும் என சட்டத் தத்துவம் கூறுகிறது. ஒரு நியாயமான மனிதன் இதனைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டுமென சட்டம் எதிர்பார்க்கிறது.

## ஆசிரியர்களுக்கான மேலதிக மொழிவிருத்திப் பாடநெறி




அனைத்து மட்டங்களிலுள்ள ஆசிரியர்களுக்கான மேலதிக மொழி விருத்திப் பாடநெறி கண்டியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பேராதனை ஆசிரியர் கல்லூரியில் அமைந்துள்ள தொலைக்கல்விப் பாடநெறி மத்திய நிலையத்தில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் வார இறுதி நாட்களில் கற்பிக்கப்படவுள்ளது.

இப்பாடநெறிகளைப் பின்பற்ற விரும்புவோர் பேராதனை தொலைக்கல்வி நிலையச் சிரேஷ்ட போதனாசிரியருடன் தொடர்பு கொள்ளுமாறு இப்பாடத் திட்டங்களை நெறிப்படுத்தவுள்ள தேசிய கல்வி நிறுவகம் கேட்டுள்ளது.

## மாகாணக் கல்வி அதிகாரிகள் இசுறுபாயவிற்கு வரத் தேவையில்லை

மாகாணக் கல்வி அதிகாரிகளின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து தீர்வு காண்பதற்கு அவர்களை இனி இசுறுபாயவிற்கு அழைக்கத் தேவையில்லை என்றும், நேரடியாக அவர்களிடமே சென்று பிரச்சினைகளைக் கேட்டறிந்து தீர்வு காணப்படும் என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். இதற்கான நடவடிக்கைகளை கடந்த 03 ஆம் திகதி முதல் ஆரம்பித்துள்ளதாகவும், உரிய பணிப்புரைகளை சம்பந்தப்பட்ட கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கு விடுத்திருப்பதாகவும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.



இவ்வாறான மாகாண மட்டச் சந்திப்பின்போது மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், வலயப் பிரிவு அதிகாரிகள் பாடசாலை, கல்லூரி அதிபர்கள் எல்லோரும் அழைக்கப்படுவார்கள் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## கல்வி ஆய்வு முறைப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

தேசிய கல்வி நிறுவனத்தின் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான திணைக்களத்தினால் கல்வி ஆய்வு முறை பற்றிய இருவேறு பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளன.

ஆறு மாதகாலத்தைக் கொண்ட முதலாவது கற்கை நெறியானது எதிர்வரும் 2007 ஆம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. கல்வி ஆய்வு முறையில் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இந்நெறி வார இறுதி நாட்களில் மட்டுமே நடத்தப்படும்.

அடுத்த பயிற்சி நெறியானது கல்வி ஆய்வு முறையில் குறிப்பிட்ட துறைக்கானது. செயல்நிலை ஆய்வு நெறி ஒகஸ்ட் 26, 27 ஆம் திகதிகளிலும், அளவுகள் தரவுப் பகுப்பாய்வு ஒக்டோபர் 28, 29 ஆம் திகதிகளிலும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரண்டு பயிற்சி நெறிகளுக்கும் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் அனைவரிடமிருந்தும் விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுவதாகத் தேசிய கல்வி நிறுவனப் பணிப்பாளர் நாயகம் ஜே.டபிள்யூ.விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். விண்ணப்ப முடிவு திகதி 20.07.2006 ஆகும்.

## மத்திய மாகாண அதிபர், ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவை 215 மில்லியன் ரூபா!

மத்திய மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற தமிழ், சிங்கள, முஸ்லிம் பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களின் சம்பள உயர்வு நிலுவைப் பணமாக 215 மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்த நிலுவைப் பணத்தை அதிபர், ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கு மத்திய மாகாண சபையில் பணமில்லையென்றும், இப்பணத்தை அனுப்பி வைக்கும்படி திறைசேரிச் செயலாளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் மாகாண முதலமைச்சர் குறிப்பிடுகிறார். ஆனால், இது குறித்து எந்தவொரு அரசாங்க அதிகாரியும் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை என்று மத்திய மாகாணப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்க் விளையாட்டுப் போட்டிகள்








விளையாட்டின் பிரதான குறிக்கோள் நாடுகளுக்கிடையில் அந்நியோன்ய உறவையும் நட்பையும் உறுதிப்படுத்துவதும் மேலும் பலமடையச் செய்வதுமாகும். இக்குறிக்கோளின் அடிப்படையிலே 1981 ஆம் ஆண்டு மேற்கு ஜேர்மனியில் இடம் பெற்ற 11 ஆவது ஒலிம்பிக் காங்கிரஸில் ஏற்படுத்தப்பட்ட ஓர் உடன்பாட்டுக்கமையத் தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டிகள் உருவாகின. தெற்காசியாவில் உள்ள ஏழு நாடுகளின் கூட்டே இந்தச் சார்க் அமைப்பாகும்.

ஆரம்பத்தில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், இலங்கை, ஆகிய நாடுகளுக்கிடையில் இவ்விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றதாயினும் பின்னர் மாலைதீவு, பூட்டான் ஆகிய நாடுகளையும் இணைத்து விரிவு படுத்தப்பட்டதாக ஏழு நாடுகளைக் கொண்டு (Saarc) சார்க்கூட்டு அமைகின்றது.


இவ்விளையாட்டுப் போட்டியின் ஊடாக இப்பிரதேசத்தில் உள்ள விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தமது திறமைகளை உரசிப் பார்க்க நல்ல சந்தர்ப்பம் உருவாகியிருக்கின்றது. தேசிய மட்டத்தில் இருந்து சர்வதேச மட்டத்தினுள் நுழையும் முதல்படியாகவும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றும் போட்டியாளர்கள் இதைக் கருதுகின்றனர்.

சார்க் விளையாட்டுப் போட்டிகளின் அங்குரார்ப்பணம் 1984 ஆம் ஆண்டு நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் நடைபெற்றது. இரண்டு வருடத்திற்கு ஒரு முறை தெற்காசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரு நாட்டில் இவ்விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன. ஐந்தாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் எமது நாடான இலங்கையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



இவ்விளையாட்டுப் போட்டிகள் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது.

இவ்விளையாட்டுப்போட்டிகளில் எவ்வெப் போட்டி நிகழ்ச்சிகளை உள்ளடக்குவது என்பதைத் தீர்மானிப்பது தெற்காசியக் கூட்டமைப்பு அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளாவர். அவர்கள் எடுக்கும் முடிவே இறுதித் தீர்மானமாகும். அதன்படி மேசைப்பந்து, நீச்சல், உதைபந்து, குத்துச் சண்டை, பாரம் தூக்குதல், குறிபார்த்துச் சுடுதல், கூடைப்பந்து, மல்யுத்தம், ஜூடோ, ஹொக்கி, டெனிஸ், கபடி போன்ற விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன.




# நீரிழிவு நோயாளி தமது பாதங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்!



நீரிழிவு நோய் என்றால் அது பற்றி விசேடமாக எமக்கு எதுவும் கூற வேண்டிய அவசியம் இல்லை. அந்தளவுக்கு இந்நோய் பிரபல்யம் அடைந்து காணப்படுகின்றது. இந்நோயை உரிய முறையில் கட்டுப்படுத்திக் கொள்ளாவிட்டால் ஏற்படக் கூடிய விளைவு பாதகமானதாகவே அமைகின்றது.

இதனால், ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளில் ஒன்றுதான் சிறுநீரகச் செயலிழப்பு ஆகும். அதேபோன்று கண்பார்வை அற்றுப்போதல், மூச்சுக் கோளாறு, நரம்பியல் பாதிப்புகள் என்பன இந்நோய் காரணமாக ஏற்படக் கூடிய பக்க விளைவுகளாகும். இந்நோய்க்குரிய காரணிகள் மற்றும் தடுப்பு வழிகளாக டாக்டர்கள் பரிந்துரைக்கும் உணவுக் கட்டுப்பாடுகள் என்பவற்றை உரிய முறையில் பின்பற்றத் தவறும்போது இத்தகைய பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

இந்நோய் நீண்டகாலம் தொடருமாயின் இரத்த நாளங்கள் பாதிக்கப்பட்டுக் குருதிச் சுற்றோட்டச் செயல்பாடு பலவீனமடைகின்றது. அதனால் நீரிழிவு (சர்க்கரை) நோய்க்குள்ளானவர்களின் பாதங்களுக்கான குருதிச் சுற்றோட்டம் பலவீனமடையும் போது அந்தச் செயற்பாட்டு நரம்புகள் சுருங்கும் நிலை ஏற்படுகின்றது. அதன் காரணமாக இந்நோய்க்கு ஆளானவர்களின் பாதங்கள் விரைவில் பல்வேறு பாதிப்புக்குள்ளாக நேரிடுகின்றது. அதனால் இந்நிலை ஏற்படாமல் இருக்க வேண்டுமாயின் இந்நோயால் அவதியுறுபவர்கள் அடிக்கடி டாக்டர்களிடம் செல்லும்போது பாதங்களையும் காட்டிச் சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்விடயத்தில் ஏற்படும் தாமதங்கள் அல்லது கவனயீனங்கள் பாரிய இழப்புக்களுக்கு வழிவகுக்கலாம். இந்நோய்க்குள்ளானவர்களின் பாதங்களில் சிறிய காயங்கள் ஏற்பட்டாலும் அது மோசமான பாதிப்பை உண்டு பண்ணக் கூடியதாகும். பாதிப்பு அதிகமாகும் போது பாதங்களை வெட்டி அப்புறப்படுத்தும் நிலை ஏற்படலாம்.

அதனால் நீங்கள் இந்நோய்க்கு ஆளாகிய ஒருவராக இருந்தால் தினமும் உங்கள் கால்களை நீங்களே நன்கு கவனித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு முடியாதவிடத்து இன்னொருவரைக் கொண்டாவது அந்தக் காரியத்தைச் செய்கின்ற போது உங்களால் உங்கள் பாதங்களைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும். உங்கள் பாதங்களை நீங்கள் தினமும் பராமரித்துச் சோதனை செய்து கொள்ளும் போது பின்வரும் விடயங்கள் குறித்துக் கவனம் செலுத்துங்கள்.






* பாதங்களின் சதை (தசை)யின் நிலை. (தசை உலர்ந்து சுருங்கி உள்ளதா? அல்லது ஈரமடைந்திருக்கிறதா?)
* இரண்டு பாதங்களதும் நிறம் (தசையின் நிறம்)
* வீக்கம் இருக்கின்றதா?
* பாதங்களின் சுவாத்திய நிலை (உஷ்ணம்)
* விரல்கள் பற்றிய அவதானம். அவற்றின் தன்மை.
* கால்களில் தழும்புகள், காயங்கள், கீறல்கள், வெடிப்பு உள்ளனவா?
* அத்தோடு காயங்கள், கீறல்கள் ஏற்படாது பக்குவமாகப் பாதுகாத்துக் கொள்ளல்.
* பாதத்தின் கீழ்ப் பகுதி வெடிப்புக்குள்ளாகும், ஒருவராயின் அப்பகுதியை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
* காயங்கள், தடிப்பு, வெடிப்புக்கள், கொப்புளங்கள் இருக்குமாயின் பொருத்தமற்ற மருந்துகளைப் பாவிக்காமல் டாக்டரின் அறிவுரைக் கேற்பச் செயல்பட வேண்டும்.
* நித்திரைக்குச் செல்லும் நேரம் தவிர்ந்த ஏனைய எல்லா நேரங்களிலும் பாதணிகளை அணிந்து கொள்ள வேண்டும்.

அமீர்.எச்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஆளில்லாமல் விண்வெளிக்குச் சென்ற ரஷ்ய விண்கலம்

2.5 தொன் நிறை கொண்ட உணவுப் பொருட்கள், நீர் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் ஏற்றப்பட்ட 'Progress 22' என்ற ரஷ்ய விண்கலம் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜூலை 1 இல் அனுப்பப்பட்ட அமெரிக்காவின் டிஸ்கவரி விண்கலத்துக்கு முன்னதாகவே 'புரோகிரஸ் 22' அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நாஸா வட்டாரம் தெரிவித்துள்ளது.

861 கிலோ எடையுள்ள விண்கல உந்து விசைப்பொருட்களும், 45 கிலோ எடை கொண்ட ஒட்சிசனும், 113 கிலோ எடை கொண்ட நீரும் உணவுப் பொருட்களும் இந்த ஆளில்லா விண்கலத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு முன்பும் கூட ரஷ்யா இத்தகைய இரண்டு விண்கலங்களை அனுப்பியிருந்ததாகவும் கூறப்படுகிறது.

# ஈஸா-ரஷ்யா கூட்டு முயற்சியில் புதிய விண்கலம்



ஐரோப்பிய விண்வெளி நிலையமான ஈஸா கடந்த மாதம் 22 ஆம் திகதி ரஷ்யாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் ஒன்றின்படி, புதிய விண்கலம் ஒன்றினைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபடவுள்ளதாக இருதரப்புச் செய்திகளும் தெரிவிக்கின்றன.

இவ்விண்கலத்தை சர்வதேச விண்வெளி நிலையத்திற்குப் பயணம் செய்வதற்குப் பயன்படுத்துவதுடன் சந்திரனுக்குச் சென்று திரும்பவும் உபயோகப்படுத்த முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டு தரப்பினரின் விஞ்ஞானிகளும் இணைந்து இவ்விண்கலத்தினை வடிவமைத்துள்ளனர். ஐரோப்பிய நாடுகளில் ஜேர்மனியும், பிரான்ஸும் 15 மில்லியன் யூரோக்களை இதற்காக முதலீடு செய்யவுள்ளதாகவும், இரண்டு வருடங்களுக்குள் இவ்விண்கலம் தயாரிக்கப்பட்டு விடும் என்றும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

ஐரோப்பாவின் இதர முன்னிலை நாடுகளான இத்தாலியும், பெல்ஜியமும் கூட தாமும் இவ் விண்கலத் தயாரிப்பில் முதலீடு செய்யவிரும்புவதாகத் தெரிவித்துள்ளன. ரஷ்யாவின் பங்கு என்ன என்பது இன்னமும் குறிப்பிடப்படவில்லை. ஆயினும், இத்திட்டத்திற்கும் அதனை முன்னிலைப்படுத்தித் தொடர்ந்து செல்வதற்கும் ரஷ்யாவே காரணம். ஏனெனில், ஐரோப்பாவைக் காட்டிலும் விண்வெளி விஞ்ஞானத்தில் ரஷ்யாதான் சிறந்த வளர்ச்சி கண்டிருக்கிறது.

# விண்வெளித் தகவல்கள்

லதா


# மீண்டும் டிஸ்கவரி

அமெரிக்காவின் டிஸ்கவரி விண்கலம் ஜூலை முதலாம் திகதியன்று சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு விண்வெளி வீரர்களையும், ஏற்கனவே அங்கு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்ற வீரர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்டிருக்கிறது.

பூமிக்கு அருகில் விண்வெளியில் நிறுத்தப்பட்டுள்ளது சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையம். டிஸ்கவரியின் இப்பயணத்தில் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியின் எதிர்காலமே அடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கொலம்பியா விண்கலம் பூமியில் தரையிறங்கும் வேளையில். வெடித்துச் சிதறியது. அதில் பயணித்த விண்வெளி வீரர்கள் அனைவரும் பலியானார்கள். விண்கலத்தின் எரிபொருள் தாங்கியிலிருந்து இன்சுலேஷன்





ஃப்ரைபஞ்ச் கீழே உடைந்து வீழ்ந்ததால் அது விண்கலத்தின் இடது பக்கத்தைத் தாக்கியது. இதனால் தான் விண்கலம் விபத்துக்குள்ளாக நேர்ந்திருக்கிறது. அப்பெருத்த சோக சம்பவத்தைத் தொடர்ந்து மூன்று வருடங்கள் அமெரிக்கா அமைதி காத்திருக்கிறது.

ஆனால், மீண்டும் விண்கலத்தைச் செலுத்தும் குறிக்கோளிலிருந்து அமெரிக்கா பின்வாங்கவில்லை. 2005 ஜூலையில் அனுப்பப்பட்ட டிஸ்கவரி விண்கலத்திலிருந்தும் ஃபிரைபஞ்ச் கீழே விழுந்ததால் அதைத் தரையிறக்கி மீண்டும் அவ்விண்கலத்தை மாற்றியமைக்கும் பணியில் அமெரிக்கா ஈடுபட்டது.

அதே விண்கலம் தான் ஜூலை முதலாம் திகதி விண்ணுக்கு ஏவப்பட்டுள்ளது.

ஃபுளோரிடாவிலுள்ள கேப்கெனெவரல் ஏவு தளத்திலிருந்தே இந்த டிஸ்கவரி ஏவப்பட்டுள்ளது. இதில் 7 விண்வெளி வீரர்கள் பயணம் செய்கிறார்கள். 45 வயதுடைய விமானப் படைத்தலைவர் ஸ்டீவ் லின்ட்சே இந்தக் குழுவுக்குத் தலைமை வகிக்கிறார். மேலும் இவர்களில் ஸ்டெபானி வில்சன் என்ற 39 வயதுப் பெண்ணும் இருக்கிறார். ஸ்டெபானி மணமாகாதவர்.

இந்த ஏழு விண்வெளி வீரர்களும் 12 நாட்கள் விண்வெளி நிலையத்தில் தங்கியிருப்பார்கள். மேலும் இப்பயணத்தின்போது விண்கலத்தின் சகல செயற்பாடுகளையும் இவர்களே கண்காணிப்பார்கள்.

சென்று திரும்பும் வரையில் டிஸ்கவரி சேதமடைந்தாலோ அல்லது முன்பு போல் கோளாறு ஏற்பட்டாலோ அடுத்த புதிய விண்கலம் தயாராகும் வரை (2011 ஆம் ஆண்டு) விண்வெளிப் பயணம் நிறுத்தி வைக்கப்படும் என்று அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

# அப்பிள்



An apple a day keeps the doctor a way என்பது அப்பிள் பழம் தொடர்பான ஓர் ஆங்கிலப் பழமொழியாகும். அப்பிள் பழத்தில் அடங்கியுள்ள சத்துக்களை அறிந்து கொண்டமையால் இத்தகைய பழமொழியொன்று உருவாகியுள்ளது. அப்பிள் பிரசித்தி பெற்ற ஒரு பழமாகும். நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே மனிதன் இப்பழத்தைச் சுவைத்துள்ளான் என்பதற்கு ஆதாரமாகப் பல கதைகள் உள்ளன.

உலகில் படைக்கப்பட்ட முதலாவது பெண்ணான ஏவாள் (Eve) தன் கணவனான ஆதாமிற்கு (Adam) அப்பிள் பழத்தை உண்ணக் கொடுத்ததாகவும், பைபிள் கூறுகின்றது. இந்நிகழ்வு பைபிளில் புசிக்கத்தகாத மரத்தின் கனி என்று கூறப்பட்டதற்கு ஒத்ததாக உள்ளது. பண்டைக் காலத்தில் நத்தார் மரங்களை அலங்கரிப்பதற்கு அப்பிள் பழங்கள் பயன்படுத்தப்பட்டன. மேலும், ஆசையின் அடையாளமாக அப்பிள் பழம் எடுத்துக் காட்டப்படுகின்றது.



கிரேக்க நாட்டுக் கற்பனைக் கதைப்படி பூமாதேவி சியுஸ் தெய்வம் (Zeus) 'ஹேரா' தேவதையை விவாகம் செய்த தினம் மிக அழகிய தங்க நிறமுள்ள அப்பிள் பழத்துடனான அப்பிள் மரமொன்றை அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினாள். அந்த அப்பிள் மரத்திலிருந்த அப்பிள் பழத்தை மிக்க ஆசையுடன் ஹேரா தேவதை உண்டாள். இதன் காரணமாக அழகான பெண் குழந்தை ஒன்றைப் பெற்றுக் கொண்டாள்.

***சுவாசத்தொகுதி, ஈரல் மற்றும் உணவுக் கால்வாயிலுள்ள அடைப்புக்களை நீக்கும் ஓர் அருமருந்தாக அப்பிள் பழம் செயற்படுவதாக கி.பி 400 ஆம் ஆண்டளவில்கண்டு பிடிக்கப் பட்டது. கி.பி 1100 இல் வைத்திய கல்லூரிகளில் அப்பிள் பழத்தின்பயன், அதனில் அடங்கியுள்ள சத்துக் கள் தொடர்பாக கற்றல்செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.***

**அப்பிள் வளரும் நாடுகள்**

**நியூஸிலாந்து**
**அவுஸ்திரேலியா**
**ஆபிரிக்கா**
**கனடா**
**அமெரிக்கா**

உரோம சரித்திரவியலாளரான 'பிலினி' என்பவர் எழுதிய அப்பிள் தொடர்பான ஒரு கதையைக் குறிப்பிட்டுள்ளார். அவர் அதில் அப்பிள் தொடர்பாக 22 விடயங்களை எழுதியுள்ளார். ஆங்கிலப் புலவரான ஷேக்ஸ்பியர் அப்பிள் தொடர்பாகக் கீழ்வருமாறு கவி பாடியுள்ளார்.

"நதிக் கரையிலுள்ள புல்வெளியில்
கடல் அலையின் நுரை போல்
ஒளி வீசும் வெளிர் நிறத்தில்
மிக அழகாக மலர்ந்திருக்கும்
அப்பிள் மலர்"



குளிர்காலம் முடிவடைய அப்பிள் மரத்தில் மலர்கள் பூத்துக் குலுங்கும் வசந்தகாலம் முடிவடைய அப்பிள் பழங்கள் பழுக்கத் தொடங்கும். அப்போது சுற்றுப்புறச் சூழல் மிக்க வாசனையாக இருக்கும்.

'Pyrus Malus' என்ற தாவரவியல் பெயரால் அழைக்கப்படும் அப்பிள் மரம் குளிர்காலநிலை உள்ள பிரதேசங்களில் நன்றாக வளரும். 'pear' என்ற லத்தீன் மொழியிலிருந்தே அப்பிள் என்ற சொல் மருவி வந்துள்ளது.

அப்பிள் கி.மு 8000 ஆம் ஆண்டளவில் ஒரு வேட்டைக்காரனால் முதன் முதலில் உலகில் மனிதனுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அவன் வேட்டையாட ஒருநாள் காட்டிற்குச் சென்றபோது சடுதியாக அப்பிள் பழத்தைச் சுவைத்துப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அப்பழ மரத்தின் கன்றொன்றை தன் கிராமத்திற்குக் கொண்டு வந்து நட்டுள்ளான். பின்பு நாடு பூராவிலும் நடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. நைல் மற்றும் தைக்கிறீஸ் நதிக்கரைப் பிரதேசங்களில் முதன் முதலில் வளர்ந்து பரவியதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இக்காலப் பகுதியில் சுமார் 25 வகையான அப்பிள் மரங்கள் காணப்பட்டன. இன்று வர்த்தக ரீதியில் அப்பிள் பயிர்ச்செய்கை நடைபெறுவதன் காரணமாக இது தொடர்பாகப் பல ஆராய்ச்சிகள் நடைபெற்றன. இதனடிப்படையில் இன்னும் புதிய புதிய அப்பிள் மரவகைகளை உற்பத்தி செய்யத் தாவரவியல் விஞ்ஞானிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கி.மு 5000 ஆம் ஆண்டளவிலிருந்து அப்பிள் பயிர்ச்செய்கை வர்த்தக ரீதியில் ஆரம்பிக்கப்பட்டதாக 'The precious book of enrichmend' என்ற நூலில் பென்க் லீ என்ற சீன தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

கி.மு 2500 ஆம் ஆண்டில்

Digitized by Noolaham Foundation.

# பழத்தின் கதை



கட்டப்பட்டதாகக் கூறப்படும் பிரா அப் இராணியின் சமாதியில் காய்ந்த அப்பிள் பழத்துண்டுகள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன.

கி.மு 1500 ஆம் ஆண்டில் அப்பிள் தோட்டம் பற்றி அசீரியர்கள் செய்த கொடுக்கல் வாங்கல்தொடர்பு பற்றிய குறிப்பில் குறிப்பிடப்பட்டுள் ளது. இக்காலப்பகுதியில் அப்பிள் தோட்டமொன்றை ஒருவர் அழித் தால் அவருக்கு மூன்று தண்டனை கள் வழங்கப்படும் எனச் சட்டக்கோவை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கி.மு 800 இல் ஹோமர் என்பவரால் எழுதப்பட்ட 'ஓடிசி' என்ற காவியத்தில் அப் பிள் பழம் பற்றிக் குறிப் பிடப்பட்டுள்ளது. கி.மு 401 பாரசீக பேரரசன் மிகப் பெரிய அப்பிள் தோட்டத்தை உருவாக் கியதாகவும் கூறப்படு கின்றது.

கி.பி 79 இல் 'இயற்கை வரலாறு' என்ற நூலை எழுதிய பிளினி என்ற சரித்திரவியலாளர் 20 வகையான அப்பிள் பழங்களின் தகவல்களைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். கி.பி 400 ஆம் ஆண்டளவில் உரோம குருமார்கள் அப்பிள் பயிர்ச்செய் கையை பிரசித்தப்படுத்த அதிக முயற்சி எடுத்தார்கள். வருமானத் தைக் கொடுக்கும் மார்க்கமாக அப் பிள் பயிர்ச்செய்கையை பிரசித்தப் படுத்தியதாகக் கூறப்படுகின்றது.

### அப்பிள் பழத்தின் பயன்கள்



சுவாசத்தொகுதி, ஈரல் மற்றும் உணவுக் கால்வாயிலுள்ள அடைப்புக்களை நீக்கும் ஓர் அருமருந்தாக அப் பிள் பழம் செயற்படுவதாக கி.பி 400 ஆம் ஆண்டளவில் கண்டு பிடிக்கப்பட்டது.

கி.பி 1100 இல்வைத் தியகல்லூரி களில்அப்பிள் பழத்தின்பயன், அதனில் அடங்கி யுள்ள சத்துக் கள் தொடர்பாக கற்றல்செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. அப்பிள் பயிர்ச் செய்கை தொடர்பான முதலாவது நூல் கி.பி 1618 ஆம் ஆண்டிலேயே கிடைக்கப் பெற்றது. 'வில்லியம் லோஷன்' என்பவரால் எழுதப்பட்ட இந்நூலில் அப்பிள் பயிர்ச்செய்கை தொடர்பான பல தக வல்கள் விளக்கமாக எழுதப்பட்டன.

கி.பி 1790 ஆம் ஆண்டிலேயே அப்பிள் மரங்களை அதிகளவில் நடுவதற்கு முதன் முதலில் நடவடிக் கைகள் எடுக்கப்பட்டன. 'தோமஸ் அன்ரா' என்றழைக்கப்பட்ட காவற் காரர் சுவைமிக்க, சத்துக்கள் நிறைந்த அப்பிள் பழங்களை எவ்விதம் பெற லாம் எனப் பல ஆராய்ச்சிகளைச் செய்ததாகவும் கூறப்படுகின்றது.

1929 ஆம் ஆண்டில் 'எட்வர்ட் பன்யாச்' என்பவரால் எழுதப்பட்ட ஒரு நூலில் நினைவாற்றலை அதி கரிக்க அப்பிள் பழம் ஒரு சிறந்த மருந்து எனக் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய சரித்திர சம்பந்தமான மற்றும் தகவல்களின் அடிப்படை யில் பார்க்கும்போது அப்பிள் பழத் தின் பயன்கள் மற்றும் அதில் அடங் கியுள்ள சத்துக்கள் எமக்குத் தெளி வாக விளங்குகின்றன. அப்பிள் பழ மானது மனிதனுக்கு மிக நெருங்கிய ஒரு பழமாக இருப்பது மட்டுமன்றி அதிலுள்ள பயன்களை பல்வேறு தேவைகளுக்கு எவ்விதம் உபயோ கப்படுத்தலாம் என இன்னும் விஞ் ஞானிகள் ஆராய்ந்து கொண்டுள் ளனர்.



### அப்பிள் மரத்தின் இயற்கை அமைப்பு

அப்பிள் மரமானது அதிக கிளை களைக் கொண்டது. ஒவ்வொரு கிளையும் இன்னும் பல கிளைகளை கொண்டிருக்கும். ஆனால், பிரதான கிளைகள் மூன்று காணப்படும் அப் பிள் மர இலைக் குருத்துகள் கபில நிறத்தில் கண்களை கவரும் வர்ணத் தில் அமைந்திருக்கும் இதன் இலை கள் சிறு சிறு மெல்லிய கோடுகளைக் கொண்டிருக்கும் இலையின் மறு புறம் நார்களைக் கொண்டிருக்கும்.

பனி உருகி செல்வதோடு அப்பிள் மரத்தில் பூக்கள் பூக்கும். கொத்துக் கொத்தாக மலரும் இப்பூக்கள் ஒரு கொத்தில் சுமார் 5 அல்லது 6 பூக் களைக் கொண்டிருக்கும். வெள்ளை நிறத்தில் பூக்கும் இப்பூக்களின்கீழ் பகுதியின் ஓரத்தில் ரோஸ் நிறம் காணப்படும்.

நன்றாகப் பழுத்த அப்பிள் பழத் தில் போசனைச் சத்துக்கள் அதிகமாக காணப்படும். குளுகோஸ், கல்சியம், பொஸ்பரஸ், இரும்பு, பொற்றாசியம் மற்றும் B, C எனும் விற்றமின்கள் அதில் உள்ளன.





அப்பிள் மரங்கள் வளரும் நாடு களில் காணப்படும். காடுகளிலும் அப்பிள் மரங்களைக் காணலாம். அப்பிள் மரங்களில் பழங்கள் வர ஆரம்பித்தவுடனே மான்கள், ஆடு மாடுகள் மற்றும் பன்றிஎன்பன மரத்தை நாடி வந்துவிடும். இங்கு விலங்குகளின் உணவாக இவை இருந்தாலும் அப்பிள் பழத்தின் விதைகளுக்கு எந்தவித பிரச்சினை யும் ஏற்படுவதில்லை. மலத்துடன் வெளியேறும் அப்பிள் விதைகள் இன்னுமொரு இடத்தில் இன்னு மொரு அப்பிள் மரமாக வளரும்

அப்பிள் விதைகள் மிகவும் சிறி யவை. கறுப்பு நிறமாகக் காணப் படும். இதன் மேல் தோல் கடினமாக இருக்கும். விதையின் மேல் தோல் இயற்கையான மினுமினுப்பைக் கொண்டது. விதை செலியுலோஸ் என்ற மேற்பட்டையால் மூடப்பட்டி ருக்கும். இதன் காரணமாக விலங்கு களின் மலத்துடன் கலந்தாலும் ஜீரணிக்காமல் வெளியேறும்.

அநேகமான நாடுகளில் பிஞ்சாக இருக்கும் போது மஞ்சள் நிறத்துடன் கலந்த பச்சை நிறமாகக் காணப்படும். படிப்படியாக அவை முற்றி வரும்போது சிவப்பு நிறமாக மாற்ற மடையும். நன்றாக முற்றிப் பழுத்த அப்பிள் பழம் சிவப்பு நிறமாக இருக்கும்.

விதைகளால் மட்டுமன்றி வேர்கள் மூலமாகவும் அப்பிள் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளலாம். இலங் கையில் அப்பிள் மரங்களைச் சடுதியாகவே காணலாம். அப்படியானால் வேர்கள் மூலம் அதனை வளர்க்கக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுவதன் காரண மாக அப்பிள் விதையைக் கொண்டு நாமும் அப்பிள் மரமொன்றை உண்டாக்க முயற்சி செய்யலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பாறைகளின் தோற்றமும் அவற்றின் பிறவாக்கமும்













புவியின் நிலத் தோற்றத்தில் காணப்படும் பாறைகள் பல்வித இயற்கை மாறுதல்களால் தோற்றம் பெறுகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

## கருங்கற் பாறைகள் (Granite Rocks)

உருகிய எரிமலைக் குழம்பு நிலத்துக்கு அடியில் இருந்து வெளிவந்து குளிர்ந்து இறுகிப் பாளம் பாளமாக- படைபடையாக மாறும். பாறைக் குழம்பு மிகவும் மந்த கதியிலேயே சிறுகச் சிறுக இறுக்கம் அடையும். இவ்விதம் மாறும் பொழுது, அங்கு பாறைத் துண்டங்கள் கண்ணுக்குத் தெரியுமளவுக்குப் புலனாகும். இத்தகையவை கண்ணுக்குத் தெரிவன பளிங்குப் பாறைகள் (Baslat-Crystal) எனப்படும். அவற்றுள் கருங்கற் பாறைகள் கப்ரோ (Gabbro) எனும் சிறப்புப் பாறைகளும் அடங்கும். நில மட்டத்துக்கு வந்த பின்பு, பாறைக் குழம்பு விரைவாகக் குளிர்ந்து இறுகும். அவ்வேளையில், இக்குழம்பின் மேற்பகுதியில் மென்மையான நுண்ணிய கற்பார்த்துகள்கள் பளிங்கு அமைவில் உருவாகும். அவை நுண்ணிய பளிங்குத் துகள்களாகும். இத்தகைய பாறைத் துணுக்குகளை 'பேஸ்லட்' (Baslat) கற்பாறை என்பர். இதேபோல், 'பமிஸ்' (Pumice) கற்பாறைகளும் கருங்கற் பாறைகளில் உருவாகும். இவை பெரும்பாலும், அதிகமாக வாயுக்களாலேயே உருவாகும். இப் பாறைகள் வாயுக்களில் இருந்து தவிர்க்கப்படும். நில மட்டத்தில் பரவும் பாறைக் குழம்பில் உருவாகும் இப் பாறைகளில் பல சிறிய துவாரங்கள் காணப்படும். இத்தகைய பாறைகள் நில மட்டத்திலும் அதேவேளையில் கடல் நீர் அடிமட்டத்திலும் உருவாகும்.

## அடையற் பாறைகள் (Sedimentary Rocks)

பாறைகளுள் ஒரு வகையான பாறைகள் பொருள்களின் அடையல்களால் உருவாகின்றன. இவை பெரும்பாலும், மழை, காற்று என்பனவற்றால் உருவாகின்றன. பாறைகளில் மழை, காற்று என்பன படும்போது, பாறைகள் உடைந்து துண்டங்களாகித் துகள்களாகின்றன. இத்துண்டங்கள் மேலும் சிதைந்து சிறிது சிறிதாகி, மணி மணிகளாகவும் மணற்றுக்கைகளாகவும் அடையல்களான (Silts) தூசிகளாகவும் ஆகின்றன. இவை, ஓரிடத்தில் இருந்து பிறிதோரிடத்துக்கு எடுத்துச் செல்லும் பொழுது, அங்கே அடிமட்டத்தில் சேகரிக்கப்பட்டு நாளடைவில், இறுகிய அடையல்களாக உருமாறும். இவ்விதம் அடையும் இறுகிய மணற்பாறை

(Sand-Stone), ஜிப்சன் இவ்விதம் உருவாகிக் கொள்ளும் சுண்ணப்பாறைகளில் சிற்றுயிர் அணுக்களின் மேலோடுகளால் உருவாகின்றன. பல இலட்சக் கணக்கான நுண்ணுயிர் அணுக்களின்று எச்சங்களால் முருகைக் கற்பார்கள் பாறைகளாக உருவாகின்றன. இவற்றின் ஆக்கத்துக்கு இரசாயன அமிலங்கள் துணை செய்கின்றன. வெண்கட்டிப்' படிவுகள் (Chalks) பெரும்பாலும் இவ்விதம் ஓரிழை (One-Celled) உயிரினங்களால் உருவாகும். மற்றும், நிலக்கரி, நிலநெய், இயற்கை வாயுக்கள் போன்றவை இவ்விதமாக தாவரங்களின் மூலத்தில் இருந்து அடையற் பாறைகளாகின்றன. தாவர, விலங்கின எச்சங்கள் பல்லாயிரம் அல்லது பல்கோடி ஆண்டுகளுக்கு மேலாக நிலத்தின் கீழ் அமிழ்ந்து, உக்கி உருமாறி வரும் பாறைகளே அடையற்பாறை வகையைச் சாரும். நிலத்தில் படை படையாக (Layers) 'ஸடார்டா' (Starta) எனும் எச்சப் படிவுகள் (Fossils) காணப்படும். இத்தகைய படிவுகள் அறிவியல் ஆய்வாளர் வேறு பல அடையற் பாறைகளாகவும் கண்டு பிடிக்க உதவுகின்றன.

## உருமாறிய பாறைகள் (Metamorphic Rocks)

ஏலவே உருவான பாறைகள் வெப்பம், குளிர், அமுக்கம் போன்றவற்றால் மூல நிலையில் இருந்து புதிய (சிலேற்-Slate போன்றவை) உருவில் உருமாறிய பாறைக்குள் இத்தகைய பாறைகளுள் அடங்கும். வாயுக்களும் நீர்ப்பாயம் (Liquid) போன்றவற்றால் காலக்கிரமத்தில் வெப்ப-தட்பங்களால் உருவாகின்ற. இத்தகைய பாறைகளிற் சிலவேளைகளில் தெளிவான மூலத்தைக் கண்டு பிடிக்க முடியாமல் இருக்கும். ஆனால், அவை மூலக் கூறுகளின் சிற்சில சிறு முளிகளிற் காணக்கூடியதாக இருக்கும். எடுத்துக்காட்டாக - ஷேல் (Shale) எனப்படும் தகட்டுப் பாறைகளின் மூலவுருக்கள், நிலத்துக்குள் ஏற்படும் வெப்பம், அழுத்தம் காரணமாக மாற்றமுறுவதைக் கூறலாம். அதேபோல், சுண்ணப்பாறைகளும் நிலத்துக்கடியில் உள்ள தட்பவெப்ப அமுக்கம் காரணமாக சலவைக்கற் பாறை (Marble) படைபடையாக உருமாறும். மணற் பாறைகளும் இவ்விதமே ஸ்படிக (Quartzites) பாறைகள்





**அன்புச் செல்வங்களே!**

**இது எமது அறிவியற் கலசத்தின் 68 ஆவது பருக்கை. இயற்கையாக யாம் காணும் கல் மண் யாவும் முதலில் ஏதோ ஒரு தோற்றத்தில் உருவாகிப் பின்னரே இன்றைய நிலையிற் காண்கிறோம். இவை அனைத்தும் ஏதோ ஒரு பரிணாம வளர்ச்சியை ஒட்டி உருவாகித் தோன்றி பிறிதோர் நிலையில் வேற்றுருக் கொள்ளும். அந்த வகையிலேயே கற்பாறைகளும் தோன்றின. அது பற்றி இங்கு பார்ப்போம். வாசியுங்கள். வாசித்தவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.**

**நன்றி.**

உருவாகின்றன. கருங் கற்பாறைகளும் காலக் கிரமத்தில் கிணஸ் (Grieises) என உருமாறும் பாறைகளாகின்றன.

நிலத்தின் மேற்படையில் காணப்பெறும் கிம்பர்லைற் (Kimberlite) பாறைகள் 150 கிலோமீற்றர் ஆழத்தில் கரியமில வாயுவால் உருவாகின்றன. இவ்விதம் கரியமில வாயுவின் இடைவினை காரணமாகவே வைரக்கற்கள் (Diamonds) மிகை வெப்பத்தால் உருவாகின்றன. இவ்வெப்ப அமுக்கம் பன்மடங்கு சென்றிகிரேட் பாகைக்கு அதிகமாக உயர்ந்து நிற்கும். இது 70,000 அடி ஆழத்துக்கு காற்றமுத்த நிலையில் (Atmospheric Pressure) உருவாகிறது. இவை கிம்பர்லைற் (Kimberlite) பாளங்களாக உண்டாக சிறு சிறு துண்டங்களாகி ஈற்றில் மிக நுண்ணிய துணிக்கைகளாகி மண்ணுடன் கலந்து பின்பு நிலமட்டத்துக்குப் பல வழிகளில் எடுத்து வரப்பட்டு மண்ணுடன் கலந்து தென்படும். இவ் வைரக்கற்களின் பரல்கள் பொறுக்கி எடுக்கப்படும். இவை சிறு துணிக்கைகள் ஆயினும், மிகவும் கனமும் உறுதியும் கொண்டவையாக விளங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்.

# முயலுக்கும், ஆமைக்கும் போட்டி தொடர்கிறது



முயலுக்கும், ஆமைக்கும் ஓட்டப்பந்தயம் நடைபெற்றதும் அதில் நன்கு ஓடக்கூடிய முயல் தோல்வியடைந்து மெதுவாகப் போகக்கூடிய ஆமை வெற்றி பெற்றதால் ஏற்பட்ட சர்ச்சையும் நீண்டகாலம் தொடர்ந்து இடம் பெற்றது. இப்போது பல தலை முறைகளுக்குப் பின்னர் இப்போ ... முயலும், ஆமையும் தொடர்ந்து ஓட்டப் பந்தயத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் இத்தகைய சந்தர்ப்பங்கள் எல்லாவற்றிலும் கதாசிரியர்கள் பழைய பாரம்பரியத்தைப் பின்பற்றி ஆமையையே வெற்றியடையச் செய்கின்றார்கள். முயலைச் செருக்கு மிக்கதாகவும், ஆமையை அப்பாவியாகவும் காட்டுகிறார்கள். ஆனால், இந்த இரண்டு மிருகங்களும் இத்தகைய போட்டி ஒன்றுக்குப் பொருந்தாதவையாகும். முயல் தன்னளவுக்கு ஓட முடியாத ஒருவனிடம் எப்படி பந்தயத்துக்கு ஒத்துக்கொள்வது. எனவே, இது வெறும் கற்பனைதான்.

இப்போது இக்கதையை விரிவுபடுத்தி எழுதியிருப்பவர் சிங்களத்தில் புகழ் பெற்ற எழுத்தாளர் குணசேன வித்தான இதனைத் தமிழில் மொழி பெயர்த்துத் தந்துள்ளார் பிள்ளை எழுத்தாளர் ஆருத்ரா சுதாராஜ்.

குணசேன விதான

சிறுவர்களின் சமூக நோக்கையும் மனோ வளர்ச்சியையும் வளம்படுத்தும் முகமாக குழந்தை இலக்கியத்தை அறிமுகப்படுத்திய இலங்கை எழுத்தாளர்களில் குணசேன விதான முக்கியமானவர்.

இவர் சிங்கள மொழியில் ஆக்கிய பல குழந்தைக்கதைகள்; தமிழ், ஆங்கிலம், அரபு, ஜேர்மன், ரஷ்யன், பல்கேரியன் உட்படப் பல மொழி பெயர்ப்புகளைப் பெற்றுள்ளன.

குணசேன விதான ஆசிய - ஆபிரிக்க எழுத்தாளர் ஒன்றியத்தினால் 1980 ஆம் ஆண்டு தங்கத்தாமரை விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவராவார்.

ஏனைய இரு இலங்கை அரச விருதுகளும் இவருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கல்வியியலாளர்களின் கருத்துப்படி இந்நூல் பிள்ளைகளின் ஆராயும் திறனை ஊக்குவித்து இலக்கிய ஈடுபாட்டை வளர்ப்பதற்கு உதவும்.

ஆருத்ரா சுதாராஜ்

இந்நூலாசிரியர் செல்வி ஆருத்ரா சுதாராஜ் தமிழில் மொழி பெயர்ப்புச் செய்த இரண்டாவது குழந்தை இலக்கியமாகும்.

ஏற்கனவே 2003 ஆம் ஆண்டில் லிலியன் சுதர்மா த.சில்வா அவர்களின் 'அணில் அப்புவுக்கு ஒரு பாடம்' எனும் நூலை ஆருத்ரா தமிழில் தந்திருக்கிறார்.

மனித வள அபிவிருத்திக் கல்வி கலாசார அமைச்சினால், 'அணில் அப்புவுக்கு ஒரு பாடம்' பாடசாலை நூலகப் புத்தகமொன்றாக அனுமதிக்கப்பட்டதோடு, அரசகரும மொழித் திணைக்களதினால் அவ்வாண்டிற்குரிய சிறந்த மொழி பெயர்ப்பு நூலாக முதற் பரிசு பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

புத்தளம் இந்து மத்திய கல்லூரி உயர் வகுப்பு மாணவியான செல்வி ஆருத்ரா தமிழில் குழந்தை இலக்கியப் பரப்பை விரிவுபடுத்தும் நோக்கில் மேலும் பல குழந்தை இலக்கியங்களை தமிழாக்கம் செய்ய விரும்புவதாகக் கூறுகிறார்.




## பேராதனை பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தின் கலை இலக்கிய போட்டிகள் - 2006

பேராதனை பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் இவ்வருடம் நாடளாவிய ரீதியில் கலை இலக்கியப் போட்டியொன்றினை நடத்தத் தீர்மானித்துள்ளது. மூன்று பிரிவுகளாக நடைபெறும் இப்போட்டியில் பாடசாலை மாணவர்கள் முதற் பிரிவிலும், பல்கலைக்கழக மாணவர்கள் இரண்டாம் பிரிவிலும், மேற்படி இரண்டிலும் சாராதோர் மூன்றாவது பிரிவிலும் அடங்குவர்.

கவிதை

அச்சுப் பிரதியாயின் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமலும் கையெழுத்துப் பிரதியாயின் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும். விரும்பிய ஒரு தலைப்பில் மரபு, புதுக்கவிதை எதுவாயிருந்தாலும் வரவேற்கத்தக்கது.

சிறுகதை

அச்சுப்பிரதியாயின் பத்துப் பக்கங்களுக்கு மேற்படாமலும் கையெழுத்துப் பிரதியாயின் பதினைந்து பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும். விரும்பிய ஒரு தலைப்பில் எழுதலாம்.

கட்டுரை

அ) பிரிவு-1 (பாடசாலை மட்டம்) க.பொ.த உயர் தரப்பிரிவு மாணவர்களுக்கு மட்டும்.

தலைப்பு

1) இணையத் தமிழ்

2) இலங்கையில் ஊடக சுதந்திரம்

3) இலங்கையில் இனமுரண்பாடும் இலக்கியமும், 350 சொற்களுக்குக் குறையாமல் மேற்குறிப்பிடப்பட்டுள்ளனவற்றுள் விரும்பிய ஒரு தலைப்பில் இருத்தல்வேண்டும்.

ஆ) பிரிவு 2 பல்கலைக்கழக மட்டம்

தலைப்பு

1) செம்மொழியாகத் தமிழ்

2) இலங்கையில் மனித உரிமை சாத்தியப்பாடும், சவால்களும்.

3) புலம்பெயர் இலக்கியம் - நிகழ்காலமும், எதிர்காலமும்

400 சொற்களுக்குக் குறையாமல் மேற்குறிப்பிட்டவற்றுள் விரும்பிய ஒரு தலைப்பில் இருத்தல் வேண்டும்.

இ) பிரிவு 3 - திறந்த போட்டி

தலைப்பு

2) ஈழத்துத் தமிழ்க் கவிதை - மரபும் மாற்றமும்

2) இலங்கை அரசியலும் அரச சார்பற்ற நிறுவனங்களும்

3) இலங்கை தமிழ்ப் பத்திரிகைகளும் படைப்புகளும்

600 சொற்களுக்குக் குறையாமல் மேற் குறிப்பிடப்பட்டவற்றுள் விரும்பிய ஒரு தலைப்பில் இருத்தல் வேண்டும்.

ஓவியம் (அட்டைப்பட ஓவியம்)

அனைவரும் பங்கு பற்றலாம். சமகால சமூக, அரசியலைப் பிரதிபலிக்கக் கூடிய ஓவியமாக இருத்தல் வேண்டும்.

எந்த வகை வர்ணத்தையும் பயன்படுத்தலாம். முதலிடத்தைப் பெறும் ஓவியம் பல்கலைக்கழக தமிழ்ச்சங்க வெளியீடான இளங்கதிர் 2006 இலக்கிய இதழில் அட்டைப்படமாக அமையும்.

போட்டியாளர்களுக்கு

ஆக்கங்கள், அச்சில் அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். பெயர், முகவரி, போட்டிப் பிரிவு, போட்டி வயது என்பன தெளிவாக இருத்தல்வேண்டும்.

போட்டியாளரின் சுயபடைப்பு என்பதை உறுதிப்படுத்தும் அவரின் கடிதமும் அதனை உறுதிப்படுத்தும் அரச உத்தியோகத்தர் ஒருவரின் உறுதி மொழியும் அடங்கிய கடிதம் ஒன்றும் ஆக்கத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

ஆக்கங்கள் 10.07.2006 இற்கு முன்பதாகத் தமிழ் சங்கம் தமிழ்த்துறை பேராதனை பல்கலைக்கழகம், பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

நான்கு தொடக்கம் எட்டு வரையிலான இடங்களைப் பெற்றுக் கொள்வோருக்கு ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

### நூல் அறிமுகம்

**எழுத்தாளர்கள், வாசகர்கள், "பொதிகை"க்கு ஆக்கங்கள், செய்திகள், படங்கள் என்பவற்றை அனுப்பி வைக்கலாம். ஆக்கங்கள் மிகச் சுருக்கமாக இருக்கவேண்டும். நூல் அறிமுகங்கள் செய்ய விரும்புவோர் நூலின் இரண்டு பிரதிகளை**

**நூல் அறிமுகம்,**

**ஆசிரியபீடம் த.பெ.எண் 2037, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்**





மருதமுனை 'ஷம்ஸ் 95' முன் பாடசாலைச் சிறார்களின் கலைநிகழ்ச்சியும், பரிசளிப்பும் அண்மையில் நடைபெற்ற போது நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட முன்பள்ளிக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.சக்காப் உரையாற்றுவதையும், கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட பாலர்கள் சிலரையும் படங்களில் காணலாம்.

(பட உதவி - மருதமுனை பி.எம்.எம்.ஏ.காதர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பழிக்குப் பழி!

ஒரு காட்டில் சிங்கம் ஒன்று அரசனாக இருந்தது. அது ஒருநாள் வேட்டைக்குச் சென்று நிறையக் காயங்களுடன் குகைக்குத் திரும்பியது. இந்தச் செய்தி காடெங்கும் பரவியது. பல விலங்குகள் நலம் விசாரிக்க அங்கு வந்தன. நாட்கள் பல சென்றன. ஆனால், நரி மட்டும் அங்கு வரவே இல்லை.

அரசனுடன் எப்பொழுதும் இருந்த ஓநாய் இதைக் கவனித்தது. 'என் பகைவன் அல்லவா அந்த நரி. பழி வாங்க நல்ல வாய்ப்புக் கிடைத்தது' என்று நினைத்தது.

சிங்கத்தைப் பார்த்து, ''அரசே நீங்கள் உடல் நலம் இல்லாமல் இருக்கிறீர்கள். யானை உங்களைப் பார்த்து விட்டுச் சென்றது. புலியும், கரடியும் வந்தன. எல்லா விலங்குகளும் வந்து வணக்கம் செலுத்தி விட்டுச் சென்றன. ஆனால், ஒரே ஒரு விலங்கு மட்டும் இதுவரை வரவில்லை'' என்றது ஓநாய்.



''எந்த விலங்கு வரவில்லை? தயங்காமல் சொல்'' என்று கோபத்துடன் கேட்டது சிங்கம்.

''அரசே! நரிதான் வரவில்லை'' என்றது.

''நரியா வரவில்லை; அதற்கு என்ன திமிர்? யார் அங்கே நரியை நான் அழைத்ததாகக் கூறி உடனே அழைத்து வா'' என்று கட்டளையிட்டது சிங்கம்.

நரியை அழைத்து வர இரண்டு கழுதைகள் புறப்பட்டன. 'நரி வந்ததும் சிங்கம் அதன் மீது பாய்ந்து கொன்று விடும். இம்முறை அது தப்பிக்க முடியாது. எதிரியைப் பழி வாங்கி விட்டேன்' என்று மகிழ்ந்தது ஓநாய். கழுதைகள் நரியைச் சந்தித்தன. ''அரசர் உம்மை அழைத்து வரச்சொன்னார்'' என்றன.

என்ன நடந்து இருக்கும் என்பதை ஊகித்துக் கொண்டது நரி. தயங்கித் தயங்கிச் சிங்கம் இருக்கும் இடத்தை அடைந்தது. நரியைப் பார்த்த ஓநாய், ''அரசே! நரிக்கு இப்பொழுதுதான் இங்கு வர நேரம் கிடைத்தது'' என்றது. கோபத்துடன் நரியைப் பார்த்தது சிங்கம், ''ஏன் இத்தனை நாட்களாக என்னைப் பார்க்க வரவில்லை. உனக்கு அவ்வளவு ஆணவமா? உன்னை என்ன செய்கிறேன் பார்'' என்று கர்ஜித்தது.

'எல்லாவற்றிக்கும் இந்த ஓநாயே காரணம். எப்படியும் இதைப் பழி வாங்கவேண்டும்' என்று நினைத்தது நரி.

''அரசே! உங்கள் அடிமை நான் உங்களை மதிக்காமல் இருப்பேனா? உங்களுக்கு உடல் நலம் இல்லை என்று கேள்விப்பட்டேன். உங்கள் நோய்க்கு மருந்து தேடி எங்கெங்கோ அலைந்தேன். புகழ் பெற்ற மருத்துவர் ஒருவரைக் கண்டேன். அவர் மருந்து ஒன்று சொன்னார். அந்த மருந்தால் உங்கள் நோய் கண்டிப்பாகக் குணம் ஆகுமாம் மகிழ்ச்சியுடன் உங்களைச் சந்திக்கப் புறப்பட்டேன். நீங்கள் அனுப்பிய தூதர்களும் வந்தார்கள். உடனே இங்கு ஓடி வந்தேன். உங்கள் அருகில் இருப்பவர்களுக்குத்தான் உங்கள் உடல் நலத்தில் அக்கறை இல்லை'' என்றது நரி.

''என்ன மருந்து? உடனே சொல்'' என்று பரபரப்புடன் கேட்டது சிங்கம்.

''அரசே! அதை எப்படிச் சொல்வேன்? தங்கள் உள்ளம் வருந்தும்'' என்றது நரி.

''தயங்காமல் சொல். எதுவாக இருந்தாலும் நான் செய்கிறேன். என் நோய் குணமானால் போதும்'' என்றது சிங்கம்.

''அரசே! நீங்கள் ஓநாயின் தோலை ஒரு வாரம் போர்த்திக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் உங்கள் நோய் குணமாகி விடும்'' என்றார் மருத்துவர். உங்கள் அருகிலேயே இருக்கிறது இந்த ஓநாய். இதைக் கொல்ல உங்களுக்கு மனம் வருமா?'' என்றது நரி. இதைக் கேட்ட ஓநாய் நடுங்கியது.

''அரசே! என்னைக் கொன்று விடாதீர்கள்'' என்று ஓடத் தொடங்கியது. ஓநாயின் மீது பாய்ந்தது சிங்கம். ஒரே அடியில் அதைக் கொன்றது.

பழிக்குப் பழி வாங்கிய மகிழ்ச்சியில் அங்கிருந்து புறப்பட்டது நரி.

**எம்.ஸமீர், அக்ரம், தரம் - $9^{A}$,**
**ஸேர் ராஸிக் பரீத் மு.வி, கொழும்பு-15.**



## பொன் மொழிகள்




- நூறு முட்டாள்கள் புகழ்வதை விட ஒரு அறிவாளி புகழ்ந்தால் போதும்.
- இருளைப் போக்குவது சூரிய ஒளி மனதின் இருளைப் போக்குவது அறிவின் ஒளி.
- நாவடக்கம் மரியாதையைக் காக்கும். தன்னடக்கம் தன்மானத்தைக் காக்கும்.
- தீராத பகையும் கூடாது. தீராத கவலையும் கூடாது.
- உதாசீனமுள்ளவனும், ஊதாரித்தனமுள்ளவனும் உயர்ந்தவர்களில்லை.
- தகுதிக்கு மேல் செலவு செய்பவன் தரித்திரத்தை விலைக்கு வாங்குகின்றான்.
- குருடனுடன் சென்றாலும், குறும்புக்காரனுடன் செல்லாதே.
- அசட்டுத்தனத்தால் அறிவாளியும் சில நேரம் தோல்வியடைவான்.

**ஆர்.மனோஜினி, தரம் - $10^{A}$, நு/வ இராகலை த.ம.வித்.**

## அணிலே! அணிலே!

அணிலே அணிலே வா வா வா
ஆலமரத்து அணிலே வா வா வா
கனிகளைக் கண்டால் விடமாட்டாய்
கடித்துக் கடித்துத் தின்றிடுவாய்
முதுகில் மூன்று வரையுடையாய்.
முன்கை தனிலே பழம் பிடிப்பாய்
பதுங்கிப் பதுங்கி நடந்திடுவாய்
பயந்து விரைந்து ஓடிடுவாய்
கிளையை விட்டுக் கிளை தாவி
கீழும் மேலும் ஓடிடுவாய்
கவலை இல்லை உன் வாழ்வில்
களிப்பாய் என்றும் வாழ்கின்றாய்.

**நஸீஹா, தரம் - 07,**
**ப/அல் யாசின் மு.வி,**
**பண்டாரவளை.**

## உங்களுக்குத் தெரியுமா?

1. உலகில் மிகக் கூடிய மக்களுடைய நாடு?
   **சீனா**
2. இலங்கையையும், இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை?
   **பாக்கு நீரிணை**
3. நீராவியில் இயங்கும் புகையிரத எஞ்சினைக் கண்டுபிடித்தவர்?
   **ஸ்டீபென்சன்**
4. வானொலியை கண்டுபிடித்தவர்?
   **மார்க்கோனி**
5. மோட்டார் மூலம் மின்சாரம் பெறும் முறையை கண்டுபிடித்தவர்?
   **மைக்கெல் பரடே**
6. மின்குமிழை கண்டுபிடித்தவர்?
   **தோமஸ் அல்வா எடிசன்**

**தொகுப்பு : ஆர்.பிரேம்குமார், தரம் $6^{B}$,**
**இ/பரியோவான் த.ம.வி, இறக்குவானை.**

## சில நிமிடம் சிந்திக்க.......

- உலகிலே எதுவுமே இல்லாதவனுக்குத்தான் எதையும் தாங்கும் இதயம் உண்டு.
- தீக்குச்சி ஒருமுறை சிரிப்பதால் தீபம் வாழ்நாள் முழுவதும் சிரிக்கிறது.
- கீழே விழுந்த நெல்மணிகளைப் பொறுக்கி யெடுத்திடலாம்; தவறவிட்ட வார்த்தைகளை மீளப்பெறுவது முடியாத காரியம்.
- எதைச் சிந்திக்கிறார் என்பதிலிருந்துதான் புதிய கருத்துக்கள் உதயம் பெறுகின்றன.
- நம்பியது தோல்விடையும்போது எல்லாமே நிலை மாறிவிட்டதாகத் தோன்றும். ஆனால், தோல்வியிலும் முயற்சியைக் கைவிடக் கூடாது.
- நல்லதை எண்ணுவது அறிவு; எண்ணியதை முடிப்பதே முயற்சி.

தொகுப்பு : அஜீம் சம்சபாத், தரம் - $10^{A}$,
கல்/திகழி மு.ம.வி, எத்தாலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னப் பூஞ்சிட்டுக்கள்

மலை முகடுகளின் இளவரசன் தான் முகிலன். அவன் களனிக் காட்டு இளவரசி மிஹிதேவியைச் சந்திக்க ஆசைப்பட்டான். அவளே தனக்கு நல்ல மனைவியாக இருப்பாள் என்றும் நினைத்தான்.

''அவள் நல்ல குணநலன்கள் உள்ள அழகிதான்.. ஆனால், நல்ல உடை உடுத்துச் சுத்தமாக இருப்பவர்களைத்தான் அவளுக்குப் பிடிக்கும்'' என்று கூறினார் முகிலனின் அமைச்சர் கிரி. ''ஆதலால், இளவரசே அவளைப் பார்க்கப் போகும்போது உங்களின் மிகச்சிறந்த ஆடையணிகளை அணிந்து செல்லவேண்டும்'' என்று கிரி மேலும் கூறினார்.

''நல்லது... நல்லது.... எனக்கென்ன குறைச்சல்'' இளவரசன் முகிலன் உரத்துக் கூறினான். ''என்னிடம் உயர்ந்த ஆடை அணிகளும், நல்ல பழக்கவழக்கங்களும் உள்ளன. இளவரசி மிஹிதேவி என்னை விரும்பாமல் வேறு யாரை விரும்பக்கூடும்'' முகிலன் எல்லோருக்கும் கேட்கும் விதத்தில் கூறினான்.

''இளவரசே!''

''என்ன?''

''உங்கள் முடி நீளமாக வளர்ந்துவிட்டது. அதனை வெட்டிக் குறைக்கவேண்டும். முகத்தைமொழுக்கென்று வழித்து மழித்துக் கொள்ளுங்கள். நகங்களை ஒட்ட நறுக்கி விடவேண்டும்....'' கிரி ஆலோசனை கூறினார்.

''ஆகட்டும்... ஆகட்டும்...'' இளவரசன் ஆமோதித்தான்.

''பயணம் செய்ய நமது புதிதாகத் தங்க வர்ணம் பூசிய ரதத்தைத் தெரிவு செய்யுங்கள். அதுதான் இளவரசிக்குப் பிடிக்கும்'' என்று கிரியைப் பணித்தான். ''அத்துடன் நமது வரவை இளவரசிக்கு அறிவித்து விடுங்கள்''

அடுத்தநாள் இளவரசன் அமைச்சர்களுடனும், பரிவாரங்களுடனும் பிரயாணத்துக்குத் தயாரானான். எல்லோருமே புத்தாடை அணிந்திருந்தனர் அவர்களின் இடைவாள்கள் பட்டை தீட்டப்பட்டுப் பளிச் சென்றிருந்தன. பாதணிகளும் மினுக்கப்பட்டிருந்தன.

இளவரசன் முன்னெப்போதும் இல்லாத விதத்தில் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தான். அமைச்சரும் அவனது நண்பருமான கிரியும் தங்க வர்ணரதத்தில் ஏறிக் கொண்டனர்.

அவர்கள் மேற்கு நோக்கி களனிக்காட்டு நாட்டை நோக்கிப் புறப்பட்டனர். மேற்குச் சூரியன் கடுமையாக சுட்டெரித்துக் கொண்டிருந்தான். அவர்கள் மாலையானதும் நன்கு களைத்துப் போய்விட்டனர். களனிக்காட்டு எல்லையில் கூடாரங்கள் அடித்து அன்றிரவு தங்கிச் செல்லத் தீர்மானித்தனர்.

மலைமுகடுகளின் காற்றை விடக் களனிக்காட்டுத் தென்றல் இளவரசன் முகிலனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அனைவரும் காலைக்கடன்களை முடித்துப் பிரயாணத்தைத் தொடரத் தீர்மானித்தனர். இளவரசனும் தனது முகத்தில் மெல்லக் கருமையாக அரும்பியிருந்த தாடியை வழிக்க எண்ணிச் சவர்க்கார நுரையையும், சவரத் தூரிகையையும் தேடினான். தூரிகையைக் காணவில்லை.

எங்கு தேடியும் சவரத்தூரிகை இல்லை. கிரி எடுத்து வர மறந்துவிட்டார். இந்த முகத்தோடு இளவரசியை சந்திப்பது எப்படி? இளவரசன் கவலையடைந்தான். கிரி தான் எங்காவது ஒரு சவரத்தூரிகை தேடி வருவதாகப் புறப்பட்டுச் சென்றார். ஆனால், எங்கு தேடியும் சவரத் தூரிகை கிடைக்கவில்லை. யாரும் தாம் அவற்றைப் பயன்படுத்துவது இல்லை எனக் கூறிவிட்டனர்.

சோகத்துடன் வந்த கிரி ஓரிடத்தில் ஒரு செடியில் நிறையத் தூரிகைகள் பூத்திருப்பதைப் பார்த்தார். அவருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. வெள்ளை, மஞ்சள், சிவப்பு எனப் பல வண்ணங்களில் தூரிகைகள் மலர்ந்திருந்தன. அவை இளவரசனுக்குச் சவரம் செய்ய ஏற்றவை.

## தூரிகை மலர்கள்

கிரி பத்துத் தூரிகை மலர்களைப் பறித்துச் சென்று இளவரசனிடம் கொடுத்தார். அவனும் மகிழ்ச்சியுடன் சவரம் செய்து கொண்டு மிஹிதேனியை சந்திக்கச் சென்றான். அவளுக்கும் இளவரசனைப் பிடித்துப் போய்விட்டது. அவர்கள் திருமணம் செய்து கொண்டு நீண்ட நாள் வாழ்ந்திருந்தனர்.


ஆச்சரியம் என்னவென்றால் தூரிகை மலர்கள் இப்போதும் களனிக்காட்டுப் பக்கம் பூக்கின்றன. நீங்கள் அந்த வழியாகச் சென்றால் அவற்றைக் காணலாம்.

- எஸ். ஷர்மினி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டா வின்சி கோ
# The Da Vinci Cod




'டாவின்சி கோட்' என்ற ஆங்கில நாவல் அண்மைக்காலத்தில் அதிகம் பேசப்பட்ட ஒரு நூல். இதனை எழுதியவர் டான் பிரவுன் என்ற நாவலாசிரியர். இதன் பரபரப்பான விற்பனையைத் தொடர்ந்து அதனைத் திரைப்படமாக எடுத்து உலகெங்கும் வெளியிட்டபோது பல நாடுகள் அதனைத் தடை செய்தன. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகளும் தடை செய்தன. ஏன்?

## கதை

இக்கதை கிறிஸ்தவ மத நம்பிக்கைகளுடன் முரண்படுவதுதான் அதனை எதிர்ப்பார்ப்பவர்கள் கூறும் காரணம். இக்கதை ஏசு கிறிஸ்து தேவபுருஷன் அல்ல என்றும் அவர் மேரி மக்தலேனா என்ற பெண்ணைக் காதலித்தார் என்றும் பின் அவளுடன் மணவாழ்வில் ஈடுபட்டு அவர்களுக்குக் குழந்தையொன்றும் இருந்தது என்றும் கூறுகின்றது. இவர்களின் வாரிசுகள் இன்றும் பிரான்ஸ் நாட்டில் மறைவாக வாழ்ந்து வருகின்றனர்.

கத்தோலிக்க திருச்சபை புனித பைபிளை உருவாக்கி கிறிஸ்துநாதரை தேவமைந்தன் ஆக்கியதுடன் மேரி மக்தலேனாவுக்கு விபச்சாரிப் பட்டம் சூட்டி அவளை வரலாற்றில் இருந்து அகற்றி விட்டது. எனினும், இந்த ரகசியத்தை 'பிரயரி ஒப் சியோன்' என்ற ரகசிய மதப் பிரிவுக் கூட்டத்தினர் இப்போதும் பேணி வருகிறார்கள். இந்த ரகசியத்தையும் ஏசுவின் வாரிசையும் வத்திக்கான் திருச்சபை 'ஒபுஸ் டெய்' என்ற மற்றுமொரு ரகசிய மத அமைப்பின் உதவி கொண்டு ஒழித்து விட முயல்வதும் இதற்கெதிராக வரலாற்றுப் பேராசிரியர் றொபர்ட் லாங்டன் மற்றும் சோபி நிவ்யூ ஆகிய இருவரும் போராடுவதும்தான் நாவலின் கதை.

கதை மிக விறுவிறுப்புடன், மிகப் புத்திசாலித்தனத்துடனும் வரலாற்று ஆதாரங்கள், வரலாறு நடந்த இடங்கள், கட்டிடங்கள், புகழ் பெற்ற ஓவியங்கள் உண்மையில் வாழ்ந்திருந்த வரலாற்று மனிதர்களான புகழ் பெற்ற ஓவியர் லியனாடோ டாவின்சி, அவர் வரைந்த புகழ் பெற்ற ஓவியங்களான மோனாலிசா, இயேசுவின் இறுதி இராப்போசனம், 'மெடோனா ஒப் த றொக்ஸ்'




ஆகியவற்றுடனும் சேர் ஐசக் நியூட்டன், விக்டர் ஹியூகோ முதலானவர்களுடனும் சுற்றிச் சுழல்கின்றது. இது உண்மையாக நடந்திருக்குமா என்ற சந்தேகத்தை வலுப்படுத்துமளவுக்குக் காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

## இறுதி இராப்போசன விருந்து


வரலாற்றுப் புகழ் பெற்ற ஓவியர் லியனாடோ டாவின்சி வரைந்த இயேசு கிறிஸ்துவின் இறுதி இராப்போசன விருந்து என்ற ஓவியத்தில் ஏசுவின் வலது புறத்தில் காணப்படுபவர் இதுவரை ஏசுநாதரின் சீடர் புனித ஜோன் என்று இனங்காட்டப்பட்டு வந்தபோதும் அது ஜோன் அல்லவென்றும் அது மேரி மக்தலேனா என்ற பெண் என்றும் கூறுகிறார் நாவலாசிரியர். கதையைப் படித்து விட்டு அவ் ஓவியத்தைப் பார்த்தால் சகலருக்கும் அப்படித்தான் தோன்றும். சோபி நிவ்யூவும் றொபர்ட் லாங்டனும் இரகசியத்தைக் கண்டு பிடிக்க சேர் வெய் டீபிங்கை சந்தித்தபோது மேற்படி மேரி மித்தலேனா விடயம் முன்னைய திருச்சபையால் மறைக்கப்பட்டு விட்டது என்று அவர் கூறுகிறார்.

## மோனாலிசா ஓவியம்



லியோனாடோ டாவின்சியின் மற்றுமொரு புகழ் பெற்ற ஓவியம் இப்போதும் பிரான்சின் பாரிஸ் தொல்பொருட் காட்சியகத்தில் லுவர் மண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இப்படம் உண்மையில் ஒரு பெண்ணின் ஓவியமல்லவென்றும் இதில் ஒரு 'அர்த்த நாரீஸ்வர' (Androgyny) ஆண்பெண் இணைந்த தோற்றம் மறைந்துள்ளதென்றும், இயற்கை, சிருஷ்டி, ஜனனம் சகலதிலும் இத்தத்துவம் உள்ளதென்றும்





இந்நாவலில் வரும் வரலாற்றுப் பேராசிரியர் லாங்டன் ஒரு விரிவுரையில் தனது மாணவர்களுக்குக் கூறுகிறார். லாங்டனும் சோபியும் ரகசியத்தைத் தேடும் முயற்சியில் இவ் ஓவியத்தில் இரகசியமாக எழுதப்பட்டிருக்கும் 'மனிதனின் துரோகம் எவ்வளவு கருமையானது' (So dark the cow of man) என்ற வார்த்தைகளைக் கண்டுபிடிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கழுகு சிறகு விரித்த தோற்றம் கொண்ட மனிதன்

டாவின்சியின் இவ் ஓவியம் உடற்கூற்றியலுடன் சம்பந்தப்பட்டது. படைப்பின் ஆண், பெண் சமத்துவத்தை குறியீடாகக் கொண்டது. கழுகு இறகு விரித்தால் போன்ற மல்லாந்த நிலையிலான தோற்றம். இவ் ஓவியம் இத்தாலியின் புளோரன்ஸ் நகரில் 'உபிஸி' காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்நூலின் ஆரம்ப இதில் நாம் தேடும் இரகசியம் இருக்கலாம் என்றும் அவர் கருதுகிறார்.

## இரகசிய குறியீட்டு மொழிச் செய்தியை கண்டுபிடித்தல்

அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய குழாய் வடிவிலான சிறு கொள்கலன் ஒன்றைக் கொலை செய்யப்பட்ட ஜேக் சன்னியரின் இரகசிய செய்தி வாயிலாக கண்டு பிடிக்கிறார்கள் சோபியும், லாங்டனும்.

## பத்தாவது பிரபு தொடர்பான மர்மம்

மத்திய கால ஐரோப்பா பல்வேறு மத ரீதியிலான மதயுத்தங்களைச் சந்தித்தது. கத்தோலிக்க திருச்சபை அரசனிலும் பார்க்க அதிக அதிகாரம் பெற்றிருந்தது. லண்டனில் இருந்த 'டெம்பிள் சர்ச்' என்ற தேவாலயம் 'நைட் டெம்பிளர்' என்று அழைக்கப்பட்ட



# ட் ஏற்படுத்திய சர்ச்சை

de

கட்டத்தில் பாரிசின் லுவர் ஜேக் ஸன்னியர் கொலை செய்யப்படுகின்றார். அவரது உடல் நிர்வாணக் கோலத்தில் மேற்படி ஓவியத்திலுள்ளபடி மல்லாந்து கிடக்கின்றது. அத்துடன் இரகசியக் குறியீட்டு மொழியில் எழுதப்பட்ட செய்தி ஒன்றும் எழுதப்பட்டுள்ளது. அதில் "றொபர்ட் லாங்டன் என்பவரைக் கண்டுபிடியுங்கள்" என்றும் கூறப்பட்டிருந்தது.



## பெண்ணையும் ஆணையும் குறிக்கும் குறியீடுகள்



பாரிசின்லுவர் கண்காட்சியகத்தில் ஐ.எம்.பெய் என்பவரால் நிர்மாணிக்கப்பட்ட ஒரு பெரும் தலைகீழான பளிங்குப் பிரமிட் காணப்படுகின்றது. இத் தலைகீழான பிரமிட் ஆண், பெண் குறியீடுகளை உள்வாங்கி அமைக்கப் பட்டுள்ளதாக றொபர்ட் லாங்டன் கருதுகிறார். அத்துடன் அது பானம் அருந்தும் குவளை வடிவிலும் இருப்பதால் இதற்குள்ளேயே உலகின் வரலாற்றை மாற்றி விடவல்ல இரகசியம் பொதிந்துள்ளதாகக் கருதப்படுகின்றது. எனினும், அதனைத் திருகித் திறப்பதற்கான இலக்கங்களைக் கண்டு பிடிக்க மேலும் பல புதிர்களை விடுவிக்க வேண்டியுள்ளது.

## விஞ்ஞானி சேர் ஐசக் நியூட்டன்

லண்டனில் உள்ள புகழ் பெற்ற 1731 ஆம் ஆண்டு கட்டிடமான வெஸ்ட் மினிஸ்டர் வபே கட்டிட நிர்மாணத்துக்கு ஒரு உதாரணமாகும். இங்கு விஞ்ஞானி சேர் ஐசக் நியூட்டனின் கலைச்சிறப்பு மிக்க சிலை காணப்படுகிறது. இக்கதையின் மற்றுமொரு புதிரை விடுவிக்க லாங்டனும், சோபியும் இங்கு வருகின்றனர். "நீங்கள் தேடும் தட்டு அவனின் கல்லறையில் இருக்கிறது" என்பதே அவர்கள் விடுவிக்க வேண்டிய புதிர்.



திருச்சபைகளின் தலைமையகமாக இருந்தது. நைட் டெம்பிளரின் உறுப்பினர்கள் 'நைட்ஸ்' (Knghts) என்று அழைக்கப்பட்ட அமைச்சருக்குரிய அதிகாரம் பெற்ற பிரபுக்களாகவும், மதகுருவாகவும் இராணுவ அதிகாரி போலும் இருந்தனர். மேற்படி லண்டன் தேவாலயத்தில் மத்தியகாலத்தில் வாழ்ந்திருந்த இத்தகைய பத்துப் பிரபுக்கள் கல்லறையில் இவர்களின் சிலைகள் படுத்த நிலையில் உள்ளன. லாங்டன் சோபி, டீபிங் ஆகியோர் அங்கு சென்றபோது 10 ஆவது சிலையைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

## கவிஞர்களின் ஓய்விடம்

லண்டன் வெஸ்ட் மினிஸ்டர் அபே கட்டிடத்தின் தென் கோடியில் 'கவிஞர்களின் மூலை' (Poets Corner) என்ற இடம் காணப்படுகின்றது. இங்கு பல புகழ் பெற்ற மற்றும் எழுத்தாளர், கவிஞர்களின் கல்லறைகள் காணப்படுகின்றன. இவர்களில் ஜியோபரி சோசர், எம்மண்ட் ஸ்பென்சர், ஜோன் டிரைடன், சார்ள்ஸ், டிக்கனீஸ் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். சேர்.ஐசாக் நியூட்டனின் சிலையைத் தேடும் முயற்சியில் லாங்டனும், சோபியும் இங்கு வர நேரிடுகின்றது.

இவ்வாறு மேற்படி நாவலில் பல்வேறு வரலாற்று நிகழ்வுகள், வரலாற்று இடங்கள், கட்டிடங்கள், தொன்மையான பொருட்கள் சம்பந்தப்பட்டுள்ளதால் இதனைப் படிப்பவர்களுக்கு இக்கதை உண்மையாக நிகழ்ந்தது என்ற மாயத்தோற்றத்தைத் தருகின்றது. ஆனால், இப்படத்தைத் தயாரித்தவர்கள் இது வெறும் கற்பனைக் கதைதானே, இதனை பெரிது படுத்தத் தேவையில்லை என்று கூறுகிறார்கள்.

**இரா.சடகோபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# இந்தியா


(கடந்தவாரத் தொடர்ச்சி)

## சனத்தொகை

சனத்தொகை : 1,049,700,118 (2003 இல்)
வயதடிப்படையில் : 0-14 வயது 32.3%
15-64 63%
65 இற்கும் மேல் 4.8
சனத்தொகை வளர்ச்சி வேகம் : 1.47%
பிறப்பு விகிதம் : ஆண் 1.07, பெண் 1
எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் : 63.62 வருடம்
'எயிட்ஸ்' நோயாளிகள் : 3.97 மில்லியன்

## மொழி, மதம்

தொடர்பாடல் மற்றும் கல்வி அரச விடயங்கள் என்பன பெரும்பாலும் ஆங்கில மொழியிலேயே நடைபெறுகின்றன. இந்தி, மராத்தி, உருது மற்றும் திராவிட மொழிகள் போன்ற 14 மொழிகள் அரச கரும மொழிகளாகவும் இந்த மொழியுடன் தொடர்புடைய பல



மதங்களும் உள்ளன. இந்து, பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம், ஜெயினம், சீக் என்பன அவற்றுள் சில.


தொழிற்படை : 15 வயதிற்கு மேற்பட்டோர் 59.5%

சனத்தொகை அடர்த்தி : நகர் பகுதிகளின் 1 சதுரக் கிலோமீற்றருக்கு 800 இற்கும் மேற்பட்டவர்கள் வாழ்கின்றனர்.

## பொருளாதாரம்

தென் ஆசிய வலயத்திலுள்ள நாடுகளுள் மிகச் சிறந்த பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக இந்தியா உள்ளது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்நாட்டின் விவசாயம் மற்றும் கைத்தொழில்கள் பிரதான காரணிகளாக உள்ளன. தேயிலை, தென்னை, இறப்பர், பருத்தி, சணல் என்பன பிரதான பயிர்களாக உள்ளன. அதுமட்டுமன்றி, கரும்பு, தாவர எண்ணெய் பயிர்கள் என்பவற்றின் மூலமும் அதிகளவு வருமானத்தைப் பெறுகின்றது. கனிப்பொருளை மூலப்பொருளாகக் கொண்டு சீமெந்து, பெற்றோலியம், இரும்புருக்கு உரத் தொழிற்சாலைகள் உருவாகியுள்ளன. இற்றைவரைக்கும் வெளிநாட்டு முதலீட்டு விடயத்தில் இந்திய



அரசின் தலையீடு மிகக் குறைவு எனலாம். கல்வி, விவசாயம், கைத்தொழில் என்பவற்றில் தொழில்நுட்பத்தின் பயன்பாடு அதிகமாக உள்ளது. சிறந்த கல்வி கற்ற தொழிற் படையொன்றை கொண்டிருப்பது பொருளாதாரம் மேலோங்கி வளர்ச்சியடையக் காரணமாக உள்ளது.

தேறிய உள்நாட்டு உற்பத்தி : 2,664 பில்லியன் டொலர்

தேறிய உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி : 4.3%
தனி நபருக்கான கொள்வனவுச் சக்தி: 2600 டொலர்
வறியோர் எண்ணிக்கை : 25%
தொழிலாளரின் எண்ணிக்கை : 406 மில்லியன்
வேலையற்றோர் : 8.8%

கைத்தொழில்கள் : கப்பல் கட்டுதல், பெற்றோலியம், சீமெந்து, போக்குவரத்து வாகன உற்பத்தி, மின்னியல் பொருட்கள், இரும்புருக்கு, உரக் கைத்தொழில், கண்ணாடி மற்றும் மட்பாண்டக் கைத்தொழில், உணவு உற்பத்தி என்பன முக்கியமானவை.

கைத்தொழில் உற்பத்தி வளர்ச்சி : 6%
ஏற்றுமதி : 44.5 பில்லியன் டொலர்

ஏற்றுமதிப் பொருட்கள் : உணவுப் பொருட்கள், ஆடை வகைகள், சீமெந்து, தங்க ஆபரணங்கள், பொறியியல் பொருட்கள், போக்குவரத்துச் சாதனங்கள், தோற்பொருட்கள், மின்சாதனங்கள், மருந்துவகைகள்

இறக்குமதி : 53.8 பில்லியன் டொலர்

இறக்குமதிப் பொருட்கள் : மசகெண்ணெய், பசளை வகைகள், இரசாயனப் பொருட்கள், இரத்தினக் கற்கள், இயந்திர உபகரணங்கள்.

நாணயம் : இந்திய ரூபாய் (INR)
பெருந்தெருக்களின் நீளம் : 3,319,644 கி.மீ



நீர் வழிப்பாதை : 16,180 கி.மீ
விமான நிலையங்கள் : 334 (சிறு விமான நிலையங்கள் உட்பட)

## நிர்வாகம்


அரசியலமைப்பு நாட்டின் பெயர் - இந்தியக்குடியரசு
நிர்வாகத் தன்மை - சமஷ்டி ஆட்சி
தலைநகர் - புதுடில்லி
தனியாக நிர்வகிக்கப்படும் மாநிலங்கள் - 7
சுதந்திரம் பெற்ற தினம் - 1947 ஆகஸ்ட் 15
தேசிய தினம் - ஜனவரி 26 (குடியரசு தினம்)

இந்தியக் குடியரசு மேற்சபை, கீழ்சபை என்ற இரண்டு அரச நிர்வாகச் சபைகளைக் கொண்டது. குடியரசின் தலைவராக ஜனாதிபதி இருப்பார். பிரதம மந்திரிக்கோ நிறைவேற்று அதிகாரங்கள் உள்ளன. அவரை மக்கள் வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# வேண்டுதல்!




ஏழை விவசாயி ஒருவனுக்கு இரண்டு மகள்மார் இருந்தனர். அவர்கள் இளவயதாக இருக்கும்போது விவசாயியின் மனைவி மரணமாகியிருந்தார். வசதி வாய்ப்புகள் அதிகம் இல்லாத நிலையிலும் ஒருவாறு கஷ்டப்பட்டுத் தனது மகள்மாரை வளர்த்து வந்தான் இந்த விவசாயி. இப்படியே வருடங்கள் பல கடந்தன. விவசாயியின் மகள்மார் இரண்டு பேரும் வளர்ந்து ஆளாகினர்.

இப்போது விவசாயியின் பொறுப்புக்கள் இன்னும் அதிகமாயின. மகள்மாரைப் பொருத்தமான யாருக்கேனும் திருமணம் செய்து வைக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. எதிர்பார்த்தது போலவே மகள்மாருக்கு பொருத்தமான கண்வன்மார் இருவரைத் தேடிப் பிடித்தார். ஒருவர் விவசாயம் செய்பவர் இரண்டாமவர் சட்டி, பானைகள் செய்பவர் முதலாவது மகளுக்கு விவசாயம் செய்பவரையும், இரண்டாவது மகளுக்குச் சட்டி பானை செய்பவரையும் திருமணம் செய்து வைத்தார் அவர்.

திருமணம் முடித்த கையோடு மூத்த மகள் தனது கணவனது ஊருக்கு சென்றுவிட்டாள். சில வருடங்கள் கழிந்தது. மகள்மாரைப் பிரிந்த துயரம் ஏழை விவசாயியைப் பெரிதும் வாட்டியது. அவனுக்கு ஆறுதல் கூற எவரும் இருக்கவில்லை. எப்படியேனும் மகள்மாரைப் பார்க்கவேண்டும் என்ற ஏக்கம் அவனுள் உண்டானது. 'மகள்மாராவது தன்னை வந்து பார்த்திருக்கலாம் தானே' என்று அவனது மனம் அவனுள்ளேயே கேட்டுக்கொண்டது. 'அவர்களுக்கு ஏதும் பிரச்சினையாய் இருக்கும் போலும், அதனால்தான் வரவில்லை போலும்....' எனத் தனக்குத்தானே ஆறுதல் கூறிக்கொண்டான்.

என்றாலும் இதற்குமேல் பொறுத்திருக்க முடியாது என முடிவெடுத்தவன், தானே சென்று மகள்மாரை சந்திப்பதென்று முடிவெடுத்தான். அதன்படியே, மகள்மாரைச் சந்திக்கப் புறப்பட்டவன், முதலாவதாக மூத்த மகளைச் சந்திக்கச் சென்றான். பல மைல் தூரம் சென்று மூத்த மகளின் வீட்டை அடைந்தான். தந்தையைக் கண்ட மகள் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றாள்.

''மகளே நீ சந்தோஷமாக இருக்கின்றாயா?'' எனக் கேட்டான் விவசாயி.

''அப்பா.... முன்னரெல்லாம் நான் சந்தோஷமாகத்தான் இருந்தேன்... ஆனால், அந்தச் சந்தோஷமெல்லாம் இப்போது இல்லாமல் போய்விட்டது'' என்றாள் அவள்.

''ஏன் என்ன நடந்தது?'' என அதிர்ச்சியுடன் கேட்டான் விவசாயி.

''ஆம் அப்பா! முன்னரெல்லாம் விளைச்சல் நன்றாக இருந்தது. ஆனால், இப்போதெல்லாம் போதிய மழை இல்லாததன் காரணமாக விளைச்சலை அது பாதித்துள்ளது. ஆகையால் மழை பொழியவேண்டும் என இறைவனைத் தினமும் நான் வேண்டுகின்றேன். நீங்களும் எனக்காக, மழை பொழியவேண்டும் என இறைவனை வேண்டிக் கொள்ளுங்கள்'' என்றாள் அவள்.

''சரி அப்படியே ஆகட்டும்...'' எனக் கூறிய அவன், அடுத்ததாகத் தனது இளைய மகளைப் பார்ப்பதற்காக அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான்.

இளைய மகளின் ஊரைச் சென்றடைவதற்கு அவனுக்கு ஒரு நாளாகியது. அந்தளவு தொலைவில் அவள் வசித்து வந்தாள். தந்தையைக் கண்ட மகிழ்ச்சியில் அவள் திக்குமுக்காடிப் போனாள்.

''மகளே.... நீ எப்படி இருக்கின்றாய்? சந்தோஷமாய் இருக்கின்றாய் தானே?'' என அவளிடமும் கேட்டான்.

''தந்தையே நான் கடந்த சில நாட்கள் வரை சந்தோஷமாகத்தான் இருந்தேன். ஆனால், அந்தச் சந்தோஷம் இப்போது இல்லையே....'' எனக் கவலைப்பட்டாள்.


''மகளே உனக்கு அப்படி என்ன நடந்தது?'' எனக் கேட்டாள்.

''கடந்த சில நாட்களாக இங்கு ஒரே மழையாகவே உள்ளது இதனால், சட்டி பானைகளைச் செய்து அவற்றை வெய்யிலில் உலர்த்துவதற்கு மழை தடையாக உள்ளது. இப்படியே மழை பெய்து கொண்டே இருப்பதால் எங்களது தொழிலை இது பாதித்துள்ளது. ஆகையால் மழையை நிறுத்துமாறு கோரித் தினமும் கடவுளை வேண்டுகின்றேன். நீங்களும் எனக்காக இந்த மழையை நிறுத்துமாறு கடவுளிடம் வேண்டிக் கொள்ளுங்கள்'' என அவள் தகப்பனிடம் கூறினாள்

மகள் கூறுவதைக் கேட்டு அவன் அதிர்ச்சியில் உறைந்து போனான். மூத்த மகள் மழைவேண்டும் எனக் கடவுளை வணங்கச் சொல்கிறாள், இளைய மகளோ மழை வேண்டாம் எனக் கடவுளை வணங்கச் சொல்கின்றாள். இருவரும் ஒரே விடயத்தை நேர் எதிராக வேண்டச் சொல்கின்றனரே இதில் யாருக்காகக் கடவுளை வணங்குவது....? என அவன் குழம்பித்தான் போனான்.

சிறிது நேரத்தில் அவனுக்குத் தெளிவு பிறந்தது. உடனே கடவுளை வணங்கத் தொடங்கினான். மகள்மார் இருவரதும் வேண்டுதல்களை கடவுளிடம் கூறினான். ''கடவுளே இதில் யாருடைய ஆசை நிறைவேற வேண்டும் என்பது எனக்குத் தெரியாது. என்றாலும் இந்த விடயத்தை உம்மிடமே விட்டு விடுகின்றேன்.. சரியான தீர்ப்பை வழங்கக்கூடியவன் நீர் ஒருவரே'' என வேண்டிக் கொண்டான்.

**எந்தவொரு வேண்டுதலாயினும் அதிலுள்ள நியாயத்தின் அடிப்படையிலேயே அது நமக்குக் கிடைக்கப் பெறும். அதிலுள்ள நியாயத்தைச் சரிவர அறியக்கூடியவர் இறைவன் ஒருவரே. இதனையே இக்கதையும் உணர்த்துகின்றது.**


அங்.இல : 769
ஜி.பிரசாத், தரம் - $7^{B}$, கொ/புனித அந்தோனியார் த.வித், கொழும்பு - 15


அங்.இல : 770
ஆர்.டொனிஸ்டன், தரம் - 10, பது/ஸ்ரீ கணேசா த.வி, பசறை.


அங்.இல : 771
ஏ.ஹசீகா, தரம் - $6^{B}$, மட்/மில்லத் மகளிர் ம.வி, காத்தான்குடி.


அங்.இல : 772
ர.மதுஷான், தரம் - $8^{C}$, க/திருத்துவக் கல்லூரி, கண்டி.


அங்.இல : 773
ஏ.ஆர்.ஷகாத், தரம் - $12^{A}$, மனல் குன்று ம.வி, புத்தளம்


அங்.இல : 774
செ.கௌரி, தரம் - 13, யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

விஜய் மாணவர் கழகம் விஜய் மாணவர் கழகம் விஜய் மாணவர் கழகம்


அங்.இல : 775
எம்.எம்.நிப்ராஸ், தரம் - $12^{B}$, தி/அல்-ஹிஜ்ரா ம.வி, திருகோணமலை.


அங்.இல : 776
த.யதுரன், தரம் - $8^{B}$, கிளி/கிளிநொச்சி ம.வி, கிளிநொச்சி.


அங்.இல : 777
பி.ஹேமகுமார், தரம் - $5^{C}$, வ/வவு தமிழ் ம.ம.வி, வவுனியா.


அங்.இல : 778
வே.திலக்ஷன், தரம் - 3, மு/தமிழ் வித்தியாலயம், முல்லைத்தீவு.


அங்.இல : 779
மொஹமட் இன்பாஸ் இக்பால், தரம் - $8^{D}$, கொ/றோயல் கல்லூரி, கொழும்பு.


அங்.இல : 780
எம்.அழகேசன், தரம் - 11, மொஹா த.வித், மஸ்கெலியா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ආයුබෝවන් ஆயுபோவன் வணக்கம்


பின்வரும் சொற்களின் உச்சரிப்பை அறிந்து கொள்ளுவோம்

| சொற்கள் | | உச்சரிப்பு | பொருள் |
|---|---|---|---|
| අපේ | | අපේ | எங்களுடைய |
| | පේ | அபே | நம்முடைய |
| ගෙය | | ගෙය | வீடு |
| | | ගෙ | இல்லம் |
| | ගෙ | Get = ගෙ | |
| | | ගෙය | |
| ලෑලි | | ලෑලි | பலகை |
| | | ලෑலி | |
| | ලෑ | Lamp = ලෑ | |
| | | ලෑලි | |
| සාදා | | සාදා | செய்யப்பட்டுள்ளது |
| | | சாදා | |
| | දා | சந்தா= දා | |
| | | සාදා | |
| තිබේ | | තිබේ | கட்டப்பட்டுள்ளது |
| | | තිබේ | |
| | ති | கத்தி = ති | |
| | බේ | Basin = බේ | |
| | | තිබේ | |
| ගෙට | | ගෙට | வீட்டிற்கு |
| | | ගෙට | |
| | ගෙ | Get = ගෙ | இல்லத்திற்கு |
| | ට | பட்டம் = ට | |
| | | ගෙට | |
| තුනක් | තුනක් | மூன்று | |
| | තු | துனக் | |
| | | பத்து = තු | |
| | | තුනක් | |
| දොරවල් | | දොරවල් | கதவுகள் |
| | | දொறவல் | |
| | දො | | |
| අපි | | අපි | நாங்கள் |
| | | அபි | நாம் |
| | පි | கப்பி = පි | |
| | | අපි | |
| පිරිසිදුව | | පිරිසිදුව | சுத்தமாக |
| | | பிரிசிදுவ | |
| | දු | பந்து = දු | |
| | | පිරිසිදුව | |






### வீடு பற்றிய வாக்கியங்கள் சில



1. අපේ ගෙය කුඩාය.
   அபே கெ குடாய
   எங்கள் வீடு சிறியது
2. අපේ ගෙය ලෑලිවලින් සාදා තිබේ.
   அபே கெய லෑලிவளின் சாදා திබේ.
   எங்கள் வீடு பலகையால் செய்யப்பட்டுள்ளது.
3. අපේ ගෙට කාමර තුනක් තිබේ.
   அபே ගෙට காமற துனக் திබේ.
   எங்கள் வீட்டிற்கு மூன்று அறைகள் இருக்கின்றன.
4. අපේ ගෙට දොරවල් පහක් තිබේ.
   அபே ගෙට දொறவல் பஹக் திබේ.
   எங்கள் வீட்டிற்கு ஐந்து கதவுகள் இருக்கின்றன.
5. අපේ ගෙට ජනෙල් තුනක් තිබේ.
   அபே ගෙට ஜனேல் துனக் திබේ.
   எங்கள் வீட்டிற்கு மூன்று ஜன்னல்கள் இருக்கின்றன.
6. අපි අපේ ගෙය පිරිසිදුව තබා ගනිමු
   அபி அபே கெய பிரிசிදுவ தබා கனிமு
   நாங்கள் எங்கள் வீட்டைச் சுத்தமாக வைத்திருப்போம்

### எழுதிப் பழகுவோம்

ගෙ

ගෙගෙ



விஜய்யே, நீ சுமந்து வரும் அனைத்து விடயங்களும் பிரமாதம். அதிலும் வாரந்தோறும் நீ சுமந்து வரும் தொடர்கதை மிகவும் சுவாரஸ்யமாகவும், உற்சாகமாகவும் இருக்கின்றது. மாணவர்களான எமக்குப் படிப்பினைக் கதைகள் மிகவும் பிரயோசனமாக இருக்கின்றன.

எம்.ருஷ்தா,
மாவனல்லை.

'விஜய்' என்றாலே ஆனந்தம். விஜய்யில் வரும் விண்வெளித் தகவல்கள், சிங்களம் பயில்வோம் என்பன என்னை மிகவும் கவர்ந்தவை.

கி.தி.பிரசாந்,
பொகவந்தலாவ.

விஜய்க்கு நாங்கள் கவிதைகளும், நகைச்சுவைகளும் எழுதி அனுப்பலாமா?

ரா.விதுஷியா, கண்டி.

• தாராளமாக அனுப்பலாம். தரமான ஆக்கங்கள் நிச்சயம் பிரசுரமாகும். (ஆர்.)

விஜய் பத்திரிகையில் வெளிவரும் விடயங்கள் அனைத்தும் எனக்கு மிகவும் பிடித்தவை. 'பாழடைந்த பங்களா' மிகவும் சிறப்பாக உள்ளது.

மு.சிவராணி, கொழும்பு-14.

நான் அனுப்பிய 'தனக்கு வந்தால்....' என்ற சிறுகதையை நீங்கள் படத்துடன் விஜய்யில் பிரசுரித்திருந்தீர்கள். அதனைப் பார்த்ததும் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். இனி அனுப்பும் ஆக்கங்களையும் பிரசுரித்து என்னை மகிழ்விப்பீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

எம்.எல்.எம்.சித்தீக்,
காவத்தமுனை.

அருமை விஜய்யே! இலங்கையில் உனக்கென்று ஒரு தனி இடத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறாய். நீ சுமந்து வரும் 'பாழடைந்த பங்களா' கதை என்னைக் கவர்ந்து விட்டது.

எம்.ஆர்.எம்.இல்வாஸ்,
காத்தான்குடி-05.

எந்தன் உள்ளத்தில் எழுச்சியைத் தூண்டி விட்ட விஜய்யே! நீ இல்லாவிட்டால் எனது திறமைகள் எல்லாம் புதைந்து போயிருக்கும். அப்படிப் புதைந்து போகாமல் ஆவலைத் தூண்டிவிட்டுத் திறமைகளை வெளிக்காட்ட வைத்த உனக்கு நன்றி. அத்துடன் எத்தனையோ மடல்களை அனுப்பி இருக்கின்றேன். ஆனால், நீ அவற்றையெல்லாம் பிரசுரிக்கவில்லை. ஆனாலும், நான் மனம் தளராமல் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருப்பேன். தயவு செய்து இந்த மடலையாவது பிரசுரிப்பாய் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

எம்.ஐ.இர்ஷாட்.

• இப்பொழுது உங்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டு இருக்குமென்று நினைக்கிறோம். (ஆர்.)

விஜய்யில் வரும் எல்லா அம்சங்களும் நன்றாக உள்ளன. நான் அனுப்பிய ஆக்கங்கள் நிச்சயம் ஒருநாள் வெளிவரும் என நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருக்கிறேன்.

ஐ.ஸ்டெலா, அக்கரப்பத்தனை.

'விஜய்' பத்திரிகையில் வெளிவரும் அனைத்து விடயங்களும் மிகவும் சிறந்தவை. ஆனால், ஒரு குறை, நான் அனுப்பிய ஆக்கங்கள் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை.

எஸ்.எம்.ஹம்ஸா, உயனவத்தை.

விஜய்யில் வெளிவரும் அனைத்து அம்சங்களும் சூப்பரோ சூப்பர். எனது ஆக்கங்கள் இரண்டு அனுப்பினேன். ஆனால், இரண்டு ஆக்கங்களும் வெளிவரவில்லை. அது எனக்கு மனவருத்தத்தைத் தருகின்றது. வெளிவராததற்கு காரணம் என்ன?

எ.சஞ்சிகா,
கல்வியங்காடு.

• வாசகர்களே! நீங்கள் அனுப்பும் ஆக்கங்கள் உடனே வெளிவர வில்லை என்று மனம் தளரவோ, வருந்தவோ வேண்டாம். உங்கள் ஆக்கங்கள் தரமானவை யாக இருந்தால் தாமத மானாலும் நிச்சயம் ஒருநாள் பிரசுரமாகும். இப்பகுதிக்கு நீங்கள் அனுப்பும் கடிதங்கள் விமர்சனப் பார்வையில் அமைந்ததாகவும், நிறை களை மட்டுமன்றி குறை களையும் சுட்டிக் காட்டு பவையாகவும் இருக்க வேண்டும். (ஆர்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

## நாடாளுமன்ற பெண் உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம்



நேபாள நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், நாடாளுமன்றத்தில் சரிசமமாக 50 வீதமாக பெண் உறுப்பினர்களுக்கு அங்கத்துவம் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி போராட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

நாடாளுமன்ற முன்றலிலும், பிரதமரின் அலுவலகத்திற்கு எதிரிலுமே இவ்வாறு இவர்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். நேபாள நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் 12 பெண் உறுப்பினர்களும் ஒரேயொரு பெண் அமைச்சருமான ஊர்மிளா அர்யால் ஆகியோரே மேற்படி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களாவர்.

இவர்களுக்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக 200 இற்கும் மேற்பட்ட நேபாளப் பெண்கள் தலைநகரம் காத்மண்டு வீதியில் இறங்கி 'மகளிர் சமத்துவம் தேவை' என்ற சுலோகத்துடன் ஆர்ப்பட்டம் செய்தனர். இந்தப் பிரச்சினைக்கு நாடாளுமன்றத்தின் ஊடாகத் தீர்வினைக் காண வழிவகை செய்வதாகவும், இதன்படி நாடாளுமன்றில் மகளிர்க்கு மூன்றில் ஒரு பங்கினை வழங்குவதற்கு பரிசீலிக்கப்படும் எனவும் ஆளுந்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் இது நம்பகரமான தகவலாக அமையவில்லை எனவும் மகளிர் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

மாவோ கிளர்ச்சியாளர்களுக்கும், நேபாள அரசாங்கத்திற்குமிடையே அண்மையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போது கூட மகளிர் பிரிவினரிடம் எவ்வித ஆலோசனையும் பெறப்படவில்லை. இதுவும் கூட ஒரு வகையில் சர்வாதிகார போக்கினையே காட்டி நிற்கின்றது. எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டனர்.

205 பேரைக் கொண்ட நாடாளுமன்றில் 12 பெண் உறுப்பினர்களே உள்ளனர். 21 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களில் ஒருவர் மாத்திரமே பெண் அமைச்சராக உள்ளார்.

நேபாளத்தில் நூற்றுக்கு 34.9 வீதம் பெண்களும், 62.7 வீதம் ஆண்களும் வசித்து வருகின்றனர். பெண்களின் ஆயுட்காலம் 60 வருடங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தாய்வான் ஜனாதிபதி மக்கள் ஆதரவு இழப்பு!

தாய்வானின் தற்போதைய ஜனாதிபதியான சென் ஷுபினெய் மீதான மக்களின் ஆதரவு கணிசமான அளவில் வீழ்ச்சி கண்டிருப்பதாகப் பத்திரிகைக் கருத்துக் கணிப்பொன்றின் மூலமாகத் தெரியவந்துள்ளது.

தாய்வானில் கூடிய விற்பனையுள்ள 'சைனா டைம்ஸ்' என்ற பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பொன்றின் மூலமே இந்த உண்மை தெரியவந்துள்ளது. இந்தக் கருத்துக் கணிப்பில் கலந்து கொண்ட மக்களில் 53 வீதமானோர் சென் ஷுயி பியோன் ஜனாதிபதி பதவிக்கு பொருத்தமற்றவர் எனத் தெரிவித்துள்ளனர். 31 வீதமானோர் மாத்திரமே அவருக்குச் சாதகமாகக் கருத்துக் கூறியுள்ளனர்.



ஜனாதிபதி சென்ஷுயிவின் உறவினர்கள் பலர் பல்வேறு மோசடி, ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தமையின் காரணமாக அதில் அதிருப்தியுற்றதன் வெளிப்பாடாகவே ஜனாதிபதிக்கு எதிராகக் கருத்துக் கணிப்புக்கள் அமைந்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, 2008 ஆம் ஆண்டு தாய்வானில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக சென் ஷு பியென்னை மீண்டும் நிறுத்துவது என்பது தொடபாக மக்கள் கருத்தறியும் தேர்தலொன்றை நடத்துவது விடயமாக ஆரயப்பட்ட விவாதமொன்றில் ஆளுங்கட்சியினர் கலந்து கொள்ளாமல் பகிஷ்கரிப்புச் செய்தனர்.

நாட்டில் உண்மையான ஜனநாயக ஆட்சியொன்றை ஏற்படுத்த வேண்டிய நிலை தோன்றியிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் மா ஓ ஜின் மக்களுக்கு ஆற்றிய தொலைக்காட்சி உரையொன்றில் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## சதாமின் வழக்கறிஞர் கொலை!



ஈராக்கில் பலவந்தமாக ஆட்சியிலிருந்து பதவி நீக்கப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்ற ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் வழக்கு விசாரணைகளில் அவர் சார்பாக வாதாடி வந்த வழக்கறிஞரான கலீல் அல் தலயீம் கொலை செய்யப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. வீட்டில் இருந்த இவரை இனந்தெரியாத சிலர் கடத்திச் சென்றே கொலை செய்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இவருடைய சடலம் சதார் நகர வீதியொன்றில் கண்டெடுக்கப்பட்டது.

இத்தகவலை கேள்வியுற்றதையடுத்து இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக சதாம் ஹுசைனும் இன்னும் 65 கைதிகளும் உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பித்தனர். இந்த ஏனைய 65 கைதிகளும் சதாமின் ஆட்சிக் காலத்தில் அதிகாரிகள் தரத்தில் கடமையாற்றியவர்களாவர்.

எனவே, இனிமேலாவது தமக்காக வாதிடும் வழக்கறிஞர்களுக்கு உரிய பாதுகாப்பினை வழங்க ஏற்பாடுகளைச் செய்யுமாறு சதாமும், ஏனைய கைதிகளும் அமெரிக்காவிடமும், சர்வதேச நாடுகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொலை செய்யப்பட்ட வழக்கறிஞர் நித்திரையில் இருந்த சமயம் பொலிஸ் சீருடையில் வந்த சுமார் 20 பேர் அடங்கிய குழுவொன்று அவரைக் கடத்திச் சென்றதாக வழக்கறிஞரின் மனைவி தெரிவித்துள்ளார்.

சதாம் ஹுசைனுக்கு எதிரான கொலை வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இந்தச் சம்பவத்துடன் மொத்தம் மூன்று வழக்கறிஞர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

சதாம் ஹுசைன் சார்பாக வாதிடுகின்ற வழக்கறிஞர்களை அச்சுறுத்தும் நோக்கிலேயே இவ்வாறான கொலைகள் நடப்பதாகவும், எனவே, மிகுதியாய் உள்ள வழக்கறிஞர்களுக்காவது உரிய பாதுகாப்பினை வழங்கவேண்டும் எனக் கூறியே சதாமும் அவரது சகாக்களும் உண்ணாவிரதத்தில் குதித்தனர்.

## அற்லஸ் கேள்வி - 55

**கேள்வி: நேபாள நாட்டில் பெண்கள் எத்தனை வீதம் உள்ளனர்?**

சரியான விடை :.............................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**அற்லஸ் வழியே உலகைக் காண்போம், கேள்வி - 55,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

போட்டி இல - 53 இன் சரியான விடை :- 'யுனைட்டட் 93'

**பரிசு பெறுவோர்**

குமுதினி யோகநாதன், தரம் - 11D,
இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு - 06.

எம்.ஏ.எம்.சாமில், கொத்.அல்-அரபா முஸ்லிம் வித்,
பஹல கொறக்கோய, நாவலப்பிட்டி.

எ·ஃப்.ஸஹானா, தரம் - 11,
முஸ்லிம் மகளிர் கல்லூரி, கல்-எலிய.

## ஈராக்கிலிருந்து ஜப்பான் இராணுவம் மீளழைப்பு!

ஈராக்கில் உள்ள ஜப்பானிய இராணுவத்தினர் அனைவரையும் மீண்டும் ஜப்பானுக்கு மீள அழைப்பதற்குத் தீர்மானித்திருப்பதாக ஜப்பான் பிரதமர் அறிவித்துள்ளார்.

பிரதமர் தனது கட்சி உறுப்பினர்களுக்கும், மக்களுக்கும் இது விடயமாகத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகின்றது. எனினும், மேற்படி விடயம் தொடர்பாக ஜப்பானிய மக்களுக்கு முழுமையாகத் தெரியாதெனவும், அவ்வாறு தெரியவந்ததும் பல்வேறு கருத்து பேதங்கள் ஏற்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஈராக்கின் தென் பகுதியான சமாவா நகரில் ஜப்பான் இராணுவத்தினர் 600 பேர் அளவில் பல்வேறு புனர்நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் அறியவருகின்றது.



இவ்வாறு இப்பகுதிகளிலிருந்து ஜப்பானிய இராணுவத்தினர் விலக்கிக் கொள்ளப்பட்டால் அப்பகுதிகளில் பிரிட்டன், அவுஸ்திரேலியா நாட்டுப் படையினர் பணிக்கு அமர்த்தப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பாழடைந்த பங்களா

நரசிம்மன்

காட்டுபங்களாவுக்குள் மனிதன் ஒருவன் மரணபயத்தில் தலைதெறிக்க ஓடி வந்து கொண்டிருக்கும் அந்தக் காட்சியை அப்பா வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டு இருந்தார்.

மதன் மிகுந்த பயத்துடன் மீண்டும் பார்வையை உள்ளே செலுத்தினான். அவனுடைய முகம் பயத்தோடு வியப்பையும் காட்டியது.

"என்ன மதன்?" என்று அப்பா கேட்டார்.

"அப்பா நான் நேற்றுப் பார்த்ததும் இதே மனிதன்தான்"

"என்ன? அவனைத்தான் பேய் கொன்றுவிட்டது என்று கூறினாயே!"

"அதுதான் அப்பா எனக்கும் புரியவில்லை. ஆனால், நான் நேற்றுப் பார்த்த அதே மனிதன் தான் இவன்"

"அப்படியா?" என்றபடி அப்பா உள்ளேயே பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தார். மதனும் அசையாமல் அங்கேயே பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது......?

அந்த மனிதனைத் துரத்திக் கொண்டு வந்தது அந்தப் பேய்......?

"அப்பா.... அதோ பாருங்கள். நேற்று வந்த அதே பேய்தான்" என்று மதன் கூற அப்பா உள்ளேயே பார்த்துக் கொண்டிருந்தார். பேயிடமிருந்து தப்பி ஓடி வந்த மனிதன் தடுமாறி விழுந்து மீண்டும் எழுந்து ஓட முயற்சிக்கையில் பேய் அவனைத் தூக்கி எடுத்து அவனின் கழுத்தில் தன் கூரிய பற்களைபதித்தது. உடனே அவன் கழுத்திலிருந்து இரத்தம் பீறிட்டது. பேய் அந்த இரத்தத்தை உறிஞ்சி சுவைத்துக் குடித்தது. பின்னர் இறந்த கோழிக்குஞ்சைத் தூக்கி வீசுவது போல் அவன் உடலைத் தூக்கி

## மீண்டும் அந்த இரத்தம் உறிஞ்சும் சம்பவம்

அத்தியாயம் 10

வீசியது.

"அப்பா! பார்த்தீர்களா? நேற்றும் இதே போல்தான் நடந்தது" என்றான் மதன்.

"அது சரி மதன், நேற்றும் இதே பேய், இதே மனிதனை எப்படி இதே போல் கொன்று இரத்தத்தைக் குடித்திருக்க முடியும்.

"அப்படியானால் இது வேறு மனிதனாக இருக்கும் என்று நினைக்கிறீர்களா அப்பா-"

"இல்லை மதன் நான் அப்படிநினைக்கவில்லை" என்று கூறி ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தார்.

மதனுக்கும் சிந்தனையில் ஏதோ புரிவது போல் இருந்தது.

"அதாவது.... இந்த பங்களாவில் சில வருடங்களுக்கு முன்னர் காவல்காரனைப் பேய் அடித்துக் கொன்று விட்டதாகக் கூறுகிறார்களே! அந்தக் காட்சிதான் இது. இந்த மனிதன் அந்தக் காவல்காரனின் ஆவியாகத்தான் இருக்கவேண்டும்"

இப்படி நினைத்தவன் இன்னொரு சம்பவத்தையும் நினைவு படுத்திக் கொண்டான். பல வருடங்களுக்கு முன்னர் மலையகத்தில் பண்டாரவளைக்கும், பதுளைக்கும் இடையில் தோவ என்னுமிடத்தில் ஒரு பஸ் விபத்துக்குள்ளாகி அதில் பயணம் செய்த 30 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டார்களாம். விபத்து நடந்தது இரவு நேரம். இப்போதும் இரவில் அதேநேரம் பார்த்து அங்கு சென்றால் விபத்து நடந்தபோது பிரயாணிகள் போட்ட கூக்குரல் சத்தம் கேட்கிறதாம். இப்படிப் பல சம்பவங்களையும் மதன் கேள்விப்பட்டு இருக்கிறான். அப்படித்தான் இதுவும் இருக்குமோ என்று மதன் நினைத்துக் கொண்டிருந்தான்.

"அப்படியானால், அங்கே காணப்பட்ட மனிதனும் ஆவிதான் போல் இருக்கிறது" என்று நினைத்தான் மதன். "ம்..... அப்படியானால், பேய் கடிக்கும்போது இரத்தம் பீறிட்டதே... அது எப்படி?" என்று சிந்தித்தான்.

'எப்படியானபோதிலும் இனியும் இங்கு இருப்பது ஆபத்து. அப்பா என்ன செய்யப்போகிறார் என்று தெரியவில்லையே!' என்று சிந்தித்தபடி மிகுந்த பீதியில் இருந்தான்மதன்.

அப்போது அப்பா சொன்னார் "மதன், நாம் உள்ளே போய் அந்தப் பேயைப் பார்த்துவிட்டு வருவோம்" என்று கூறி வாயிற்கதவு அருகில் செல்ல முனைந்த அப்பாவை இறுக்கிப் படித்துக் கொண்டான் மதன்.

"அப்பா வேண்டாம், வேண்டாம்.... எனக்குப் பயமாக...." என்று இழுக்கும் போதே அப்பா கூறினார்.

"இந்த வார்த்தைதான் உன் வாயில் இருந்து வரக்கூடாது" என்று எதிர்பார்க்கிறேன். பயம் என்ற சொல்லை உன் அகராதியிலிருந்தேஎடுத்துவிடு. அந்தப் பேயைப் பார்க்காமல் போனால் நான்இன்று எடுத்த முயற்சியெல்லாம் வீணாகிவிடும். வா... மதன்...." என்று அவன் கையைப் பிடித்து இழுத்தார் அப்பா.

"அப்பா..... ஆபத்தை விலை கொடுத்து வாங்க வேண்டுமா? பேயுடன் நம்மால் போராட முடியுமா? வாங்கப்பா போய்விடுவோம்" என்று மதன் கூறினான்.

"மதன், உனக்குப் பயமாக இருந்தால் நீ இங்கேயே நில். நான் போய் பார்த்துவிட்டு வருகிறேன்' என்று கூறி அவனிடமிருந்து கைகளை விடுவித்துக் கொண்டு போகத் தயாரானார் அப்பா.

அப்பாவுக்கு ஏதும் நடந்து விடுமோ என்ற பயத்தில்தான் அவன் அன்று அப்பாவுடன் துணிந்து புறப்பட்டு வந் தான்.

இப்பொழுது அப்பா மட்டும் தணியாகப் போய்அவருக்கு ஏதும் நடந்துவிட்டால் என்று பயந்த மதன், அவனையும றியாமல் "அப்பா" என்று அலறிவிட்டான். அவ்வளவு தான்......

வாயிற்கதவு திறக்கப்பட்டது. அப்படியானால் அவனுடைய சத்தம் பேய்களுக்குக் கேட்டிருக்கவேண்டும் என்று மதன் நினைத்துக் கொண்டான்.


அப்பொழுது.....உள்ளிருந்து ஓர் ஒருவம் வெளியில் வந்தது. அது.....? அந்தப் பேய்தான் மதனுக்கு உடல் நடுங்கியது. அந்தப் பேய்க்குப் பின்னால் அந்த உருவம்...

பேயினால் கொல்லப்பட்ட அந்த மனிதன் அவன்தான் நின்று கொண்டிருந் தான்.

அப்படியானால்.....? பேய்க்குப் பின்னால் நிற்பது கொல்லப்பட்ட மனிதனின் ஆவியா?

மதனுக்கு இரத்தம் உறைவது போல் இருந்தது.

(தொடரு...)





நன்றி உணர்வு
குறுந்தொடர்
விரைவில்
ஆரம்பம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருந்தாத நட்பு 4

கதை - நரசிம்மன் | ஓவியம் - எஸ்.டி.சாமி | கிரபிக்ஸ் - அனுர்ஜன்




## சேற்றுப் பாம்பு



சேற்றுப்பாம்பு (*Mudsnake*) என்று அழைக்கப்படும் அரைமீற்றர் நீளமுள்ள இந்தப் புதிய இனப்பாம்பு இந்தோனேஷியாவின் கப்புவாஸ் நதிக்கு அருகிலுள்ள பகுதியில் பிடிக்கப்பட்டது.

இது ஒரு மர்மமான இனத்தைச் சேர்ந்தது என்றும் இது ஓணான் போன்று தனது நிறத்தை மாற்றிக் கொள்ளக்கூடிய இயல்புடையது என்றும் இந்தோனேஷியாவிலுள்ள விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

## நீச்சல் தடாகத்தில் பனிக்கரடி



தெற்கு ஜெர்மனியின் 'நியூரெம்பெர்க்' மிருகக்காட்சிச்சாலையில் பனிக்கரடியொன்று தனது நீச்சல் தடாகத்தில் நீந்துவதையும் அதனைக் கண்ணாடி ஜன்னலூடாக சிறுவர்கள் பார்த்து மகிழ்வதையுமே படத்தில் காண்கிறீர்கள். கடந்த இரண்டு வாரங்களில் இந்த மிருகக்காட்சிச்சாலையில் நான்கு சிங்கக் குட்டிகள் பிறந்துள்ளன.

## தாய்மையின் பெருமை

தாயினால் கைவிடப்பட்ட புலிக்குட்டிக்குத் தன்னுடைய குட் டியுடன் சேர்த்துப் பால் கொடுத்துத் தாய்மையின் பெருமையைக் காட்டுகிறது இந்த நாய்த்தாய். வடசீனாவின் சாங்ஷி மாகாணத்தில் உள்ள மிருகக்காட்சிச் சாலையிலேயே இந்தக் காட்சி புலிப்பாலில் உள்ளதைப் போன்ற போஷாக்கு நாய்ப்பாலி லும் உள்ள நிலையில் இந்தப் புலிக்குட்டிக்கு அவசரமாக நாய்ப்பால் தேவைப் பட்டமை யும் குறிப்பிடத்தக்கது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய ஸ்போர்ட்ஸ்

வி.ரெட்லி ஹெரிசன்

# ரொனால்டோவின் உலக சாதனை!



பிரேஸில் கால்பந்தாட்ட அணியின் வீரர் ரொனால்டோ அதிகூடிய கோல்களைப் பெற்றவர் என்ற ரீதியில் உலக சாதனையொன்றை நிகழ்த்தியுள்ளார்.

பிரேஸில் மற்றும் கானா அணிகளுக்கிடையே நடைபெற்ற இரண்டாம் சுற்றுப் போட்டியின் போது கோல் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தமையின் மூலமே ரொனால்டோ இந்த உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார். இதன்படி, உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டிகளில், அதிகூடிய 15 கோல்களைப் பெற்றவர் என்ற சாதனையை ரொனால்டோ நிகழ்த்தியுள்ளார்.

இதற்கு முன்னதாக இச்சாதனையை ஜேர்மனி வீரரான நுட் குலியட் என்பவரே நிகழ்த்தியிருந்தார். இவர் அப்போது பெற்றிருந்த மொத்தக் கோல்கள் 14 ஆகும். இதனை முறியடித்தோ ரொனால்டோ தற்போது உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இப்போட்டியின் போது போட்டி ஆரம்பமாகி ஐந்தாவது நிமிடத்திலேயே ரொனால்டோ சாதனைக் கோலினைப் பெற்றார். இதன் பின்னர் 46 நிமிடத்தில் எட்ரியானோ இரண்டாவது கோலினையும், இடைவேளையின் பின்னர் இரண்டாம் அரை நேர ஆட்டத்தின் போது ரொபேட்டோ மூன்றாவது கோலினையும் பிரேஸிலுக்கு பெற்றுக் கொடுத்தனர். இதன்படி,

இப்போட்டியில் 3-0 என்ற கணக்கில் பிரேஸில் அணி வெற்றி பெற்றுக் கால் இறுதிப் போட்டிக்குத் தகுதியைப் பெறும் வாய்ப்பைப் பெற்றிருந்தது.

## கிரிக்கெட் சபைத் தலைவர் போட்டியில் அமைச்சர் ஸ்ரீபதியும்!

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்குத் தலைவரைத் தெரிவு செய்யும் வாக்கெடுப்பு ஜூலை 15 ஆம் திகதி நடைபெறவுள்ளமை நாம் அறிந்ததே.

இந்த வாக்கெடுப்புப் போட்டியில் அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராச்சியும் தலைவர் பதவிக்கு போட்டியிடவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதன்படி, தற்போதைய இடைக்காலக் கிரிக்கெட் சபையின் தலைவரான ஜயந்த தர்மபாலவுக்கும், அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராச்சிக்கும் இடையே தலைவர் பதவிக்கெனக் கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சில நிபந்தனைகளின் படியே சூரியாராச்சிக்கு இப்போட்டியில் கலந்து கொள்ளத் தான் அனுமதி அளித்ததாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சரும், ஸ்ரீபதி சூரியாராச்சியும் விளையாட்டுத்துறை அமைச்சில் வைத்து நீண்ட நேரம் கலந்துரையாடியதாகவும் அறியவருகின்றது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, "கிரிக்கெட் சபையின் தலைவர் பதவிக்கு ஸ்ரீபதி சூரியாராச்சி போட்டியிடுவதை எதிர்க்கப் போவதில்லை எனவும், எனினும், சிலர் குழப்பங்களை ஏற்படுத்தும் நோக்கில் இந்த வாக்கெடுப்பில் பல்வேறுபட்டோரைப் போட்டியிடச் செய்ய முயற்சிப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும், எனவே சூரியாராச்சியைப் பொறுத்தவரையில் அவர் ஒரு 'சுயேட்சை' போட்டியாளராகக் கலந்து கொள்வாரேயானால் தான் எதிர்க்கப் போவதில்லை" எனவும் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதிலும் இன்னொரு தரப்பாரின் கருத்தின்படி, ஸ்ரீபதி சூரியாராச்சிக்குப் போட்டியிட அனுமதி வழங்கப்பட்டிராவிட்டால் மனித உரிமைகள் அமைப்பில் இது தொடர்பாக அவர் முறையிடத் தீர்மானித்திருந்ததாகவும், இதன் காரணமாகவே அவருக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

## சமநிலையில் முடிந்த போட்டி

இந்தியா-மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையே நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் 581 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 362 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர், மீண்டும் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 6 விக்கெட் இழப்பிற்கு 172 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

எனவே, 391 என்ற வெற்றி இலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி நான்கு விக்கெட் இழப்பிற்கு 298 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் போட்டி முடிவிற்கு வந்தமையால் வெற்றி தோல்வியற்ற போட்டியாக அறிவிக்கப்பட்டது.



தலவாக்கலை தோட்டத்தில் அண்மையில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்ற அணியைச் சேர்ந்த குழுவினர் வெற்றிக் கேடயங்களுடன் காணப்படுகின்றனர். மத்தியில் தலவாக்கலை தோட்ட சிறுவர் மன்றத் தலைவர் ச.சந்திரமதன் அமர்ந்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஏன்? எப்படி?

★★ இறைச்சி வகைகளை உண்பதை விடக் காளான் வகைகளை உண்பது உடம்பிற்கு ஆரோக்கியமானது என ஏன் கூறப்படுகின்றது?

நாம் உட்கொள்கின்ற உணவு வகைகளில் பலவித போஷாக்குகளும் இருக்க வேண்டியது அத்தியாவசியமாகும். இதன்படி நமது உடல் வளர்ச்சிக்கும், தொழிற்பாட்டிற்கும் தேவையான புரதச்சத்துக்கள் இறைச்சியை விடக் காளான்களில் அதிகமாகக் காணப்படுகின்றன.



அதுமட்டுமன்றி உணவுக் குழாயின் தொழிற்பாட்டிற்குத் தேவையான போதிய சத்துக்களும் இந்தக் காளான்களில் காணப்படுகின்றன. நாம் உட்கொள்கின்ற உணவு வகைகளில் இரு வகையிலான கொழுப்புகள் உள்ளது. இதில் முதலாவது வகையான கொழுப்பானது இலகுவாகக் கரைந்து போகக்கூடிய தன்மையை கொண்டவை. இரண்டாவது வகை கொழுப்பே 'கொலஸ்ட்ரோலாக' மாறுகின்றது. இந்தக் கொலஸ்ட்ரோலானது சிறிது சிறிதாக குருதி நாளங்களின் உட்புறங்களில் படிந்து விடுகின்றன. நாளடைவில் இவ்வாறு படிகின்ற கொலஸ்ட்ரோலால் குருதி ஓட்டம் தடைப்படக்கூடிய நிலை ஏற்படுகின்றது. இது மரணத்தைக் கூட ஏற்படுத்திவிடும் நிலையை உருவாக்கிவிடும்.

★★ இறுக்கமான ஆடைகளை அணியும்போது உடம்பிற்கு அசௌகரியமாகவும் அதிக உஷ்ணமாகவும் இருப்பது ஏன்? குறிப்பாக நைலோன், பொலியெஸ்டர் துணிகளிலான உடைகளை இறுக்கமாக அணியும் போதே அதிகமாக இத்தகைய நிலை ஏற்படுகின்றது


ஏனெனில் இவ்வகைத் துணிகள் ஈரலிப்பை உறிஞ்சுவதில்லை. எனவே, உடல் வியர்க்கும் வேளைகளில் வியர்வையையும் இவை உறிஞ்சுவதில்லை.



மறுபுறம், ஆடையானது இறுக்கம் இல்லாமல் இருந்தால் சிறிதேனும் காற்றோட்டம் உடம்பிற்குக் கிடைக்கும் இவ்வாறு காற்றோட்டம் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் அதன் மூலமாகவேனும் வியர்வை உலர்த்தப்படுவதோடு, உடல் வெப்பமும் வெளியேறுவதற்கு இடவசதியாக அமைந்து விடுகின்றது.

மாறாக இறுக்கமாக ஆடையை அணிவதால் காற்றோட்டம் இல்லாத நிலையில், வியர்வையும் உறிஞ்சப்படாத நிலையில், உஷ்ணமும் வெளியேற முடியாமல் அசௌகரியமான நிலை தோன்றுகின்றது.

# செருப்பைக் கண்டுபிடித்தவர் யார்?





குகைகளில் வாழ்ந்த ஆதிகால மனிதன் கல்லும் முள்ளும் நிறைந்த பாதைகளில் நடக்க வேண்டியிருந்தது. தனது கால்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டி அவன் புல், பாய், தோல் அல்லது பட்டையான மரக்கட்டைகளால் காலைச் சுற்றிக் கொண்டான்.

இவற்றைப் பாதத்தின் அடியில் வைத்துக் கொண்டு, தோல் வாரினால் கணுக்காலுடன் சேர்த்துக் கட்டிக் கொண்டான். முதல் செருப்புப் பிறந்த கதை இதுதான்.

நாகரிகமடைந்த மக்களில் முதன்முதலில் செருப்பைத் தயாரித்தவர்கள் எகிப்தியர்கள் தான். அவர்கள் தோல், நாணல்புல் ஆகியவற்றால் செய்த பட்டிகளை இரண்டு தோல்வார்களின் உதவியால் காலுடன் சேர்த்துக் கட்டிக்கொண்டார்கள்.



கால் பெருவிரலைப் பாதுகாக்க வேண்டி செருப்பின் முற்பகுதியை வளைத்தனர். கி.மு 2000 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட செருப்புக்களின் மாதிரிகள் எகிப்தில் கிடைத்துள்ளன. குளிர்ந்த பிரதேசங்களிலுள்ள மக்கள் வேறு விதமான செருப்புக்களைப் பயன்படுத்தினர். பை போன்ற இச்செருப்புக்கள் கால்களைக் குளிர் தாக்காமல் பாதுகாத்தனர்.

புதுமுறைச் செருப்புக்களின் வரலாறு சிலுவைப் போர்களின் காலத்திலிருந்து தொடங்கியது எனலாம்.

நீண்ட போர்களில் ஈடுபட்ட கிறிஸ்தவ வீரர்களுக்குத் தங்கள் கால்களைப் பாதுகாத்துக்கொள்ள நெடுநாள் உழைக்கும் செருப்புக்கள் தேவைப்பட்டன.

நாளடைவில் இத்தாலி, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்தில் பல அழகான செருப்புக்களும், சப்பாத்துக்களும் விற்பனைக்கு வந்தன.

**பாத்திமா நுஸ்ரத் நவாஸ்,**
**தரம் - 9,**
**முஸ்லிம் பெண்கள் தேசிய பாடசாலை,**
**தர்ஹா நகர்.**




**கைவண்ணங்கள்**
**த.பெ.எண் 2037**
**கொழும்பு**



என்.திவ்யா மீராங்கனி,
தரம் - $7^{B}$,
நீர்/விஜயரத்தினம்இ.ம.கல்,
நீர்கொழும்பு.



ம.ஜனார்த்தனி,
தரம் - 9,
நீர்/விஜயரத்தினம்
இ.ம.கல்,
நீர்கொழும்பு.



எம்.எஸ்.எம்.நிதாத்,
தரம் - $7^{A}$,
நீர்/விஜயரத்தினம்இ.ம.கல்,
நீர்கொழும்பு.



எஸ்.ரிஷோன்,
தரம் - $9^{A}$,
நீர்/விஜயரத்தினம்
இ.ம.கல்,
நீர்கொழும்பு.



என்.விவேந்தினி,
தரம் - $9^{C}$,
பு/ஆண்டிமுனை த.ம.வி,
உடப்பு.



ஏ.சனுஜா,
தரம் - $9^{A}$,
நீர்/விஜயரத்தினம்
இ.ம.கல்,
நீர்கொழும்பு.



ஆர்.கிரிசாந்தன்,
தரம் - 6,
க/வத்தேகம பாரதி த.ம.வி,
வத்தேகம.



வி.திலீப்காந்த்,
தரம் - $7^{A}$,
நீர்/விஜயரத்தினம்
இ.ம.கல்,
நீர்கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1, 2, 3, 4 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் உறையிலும் 5ஆம் இலக்க குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடையை தபால் அட்டையில் ஒட்டி 2006.07.12ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 59**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## அறிவுக்கு விருந்து விடைகள் - 56

**போட்டி : 01** ✱ முதலாவது படம்

**போட்டி : 02**
1 ஆவது நபர் - கொஃபி அனான் - (a)
2 ஆவது நபர் - நெல்சன் மண்டேலா - (b)
3 ஆவது நபர் - தாபோ பெகி - (d)

**போட்டி : 03**
1. 3 மணி 55 நிமிடம்
2. காலை 7.05 இற்கு தலவாக்கலையை வந்தடைந்திருக்கும்.
3. காலை 7 மணி 40 நிமிடம்

**போட்டி : 04**
1. கொன்கோர்ட்
2. இமயமலை
3. சீனா
4. மூங்கில்
5. சாக்கடல்

## 5 குறுக்கெழுத்துப் போட்டி. இல.70

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | ■ |
| | ■ | ரீ | ■ | 4 | 5 |
| 6 மீ | | | | ■ | ட் |
| | ■ | | ■ | 7 | |
| ■ | 8 | | | | |
| 9 | | ம் | ■ | | ■ |

### மேலிருந்து கீழ்

01. இந்தியா-பாகிஸ்தான் எல்லைக் கோட்டுக்கு இடைப்பட்ட நகரம்.
02. (கோயிலில்) மரியாதைக்குரியவர்களுக்குத் தலையில் அணிவிக்கும் கடவுளுக்குச் சாத்திய பட்டுத்துணி.
03. தூரம் எனவும் பொருள்படும்.
05. ஆடு, மாடுகளைக் கட்டி வைக்கும் இடம். (குழம்பி)
07. இறக்கை - ஒத்த சொல்.
08. எண்ணிக்கையில் கூடியதை இப்படிக் குறிப்பிடலாம்.

### இடமிருந்து வலம்

01. தற்போது ஜேர்மனியில் நடந்து கொண்டிருக்கும் உலகக் கிண்ண சுற்றுப்போட்டி.
04. ஒரு வன்முறைச் செயலாகவும் குறிப்பிடலாம். (மாறி)
06. மீன் பிடிப்பை தன் தொழிலாகச் செய்பவன்.
07. கறையான் - ஒத்த சொல்.
08. படகை ஓட்டிச் செல்பவன்.
09. பாத்திரம்.

**குறுக்கெழுத்துப் போட்டி -70**
**"விஜய்"**
**த.பெ.எண். 2037 கொழும்பு**

## 1 சரியான உருவை அமைக்க



## 2 பன்மையில் எழுதுக

1. Foot = ..............................
2. Sheep = ..............................
3. Tooth = ..............................
4. Woman = ..............................
5. Mouse = ..............................

## பொருள் தருக

1. Comet = ..............................
2. Eclipse = ..............................
3. Whirlpool = ..............................
4. Cyclone = ..............................
5. Planetarium = ..............................

## கணக்குப் புதிர்



3

மேலுள்ள கூடையில் பல நிறங்களினாலான பந்துகள் குவிக்கப்பட்டுள்ளன. ரமேஷிடம் அவனது அக்கா கண்ணைக் கட்டிக் கொண்டு ஒரு சுற்றில் 5 பந்துகள் வீதம் 5 சுற்றுக்களில் 5 சிவப்பு நிறப்பந்துகளை எடுக்கச் சொன்னாள். முதல் சுற்றில் 2 சிவப்புப் பந்துகளும் 3 நீலப் பந்துகளும் வந்தன. 2,3 ஆம் சுற்றுக்களில் 3 நீலப் பந்துகளும் ஒரு மஞ்சள் பந்தும் பச்சைப் பந்தொன்றும் எடுக்கப்பட்டன. 4 ஆம் சுற்றில் மஞ்சள் பந்துகள் 4 உம் சிவப்புப் பந்தொன்றையும் எடுத்தான். 5 ஆம் சுற்றில் பச்சைப் பந்துகள் 3 ஐயும் இரு சிவப்புப் பந்துகளையும் எடுத்தான்.

a) ரமேஷ் கூடையிலிருந்து எடுத்த பந்துகளின் மொத்த எண்ணிக்கை யாது?
b) ரமேஷ் எந்தெந்த சுற்றுக்களில் எத்தனை சிவப்புப் பந்துகள் எடுத்தான்?
c) 5 சுற்றுக்களிலும் எத்தனை பச்சைப் பந்துகள் வந்தன?

## 4 சரியான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக

வீசியடிக்கும் புயற்காற்றுக்கும், பேய் மழைக்கும் அஞ்சிக் குளிரில் நடுங்கியவாறு ஊருக்கு வெளியே இருக்கும் ................ (பாள், பாழ்) மண்டபத்துத் தூணோரத்தில் கிடந்தது அந்த நாய். ஐந்தாறு நாட்களாக விடாப்பிடியாய் ......................(மூர்த்தண்ய, மூர்த்தன்ய) வேகத்தோடு, எச்சில் இலை தேடிப் போகக் கூட வெளியே தலைகாட்ட முடியாதபடி மழை ...................... (கொட்டும், கொட்டுகிறது)

தூணோரத்தில் நீண்டு படுத்து நீட்டிய ............................ (முன்னங்கால்களின், முண்ணங்கால்களின்) மீது முகத்தைப் படிய வைத்துக் கொண்டு கண்களை மூடிப் பசி ............................ (பொருக்காமல், பொறுக்காமல்) மயங்கிக் கிடந்தது. அது தன் வாழ்க்கையில் இன்று வரை ........................ (பட்டிணி, பட்டினி) கிடந்தது கிடையாது. எச்சில் இலை ............................ (பொறுக்கியது, பொருக்கியது) கிடையாது.

தொடர்ந்து கொண்டிருக்கும் இயற்கையின் பேய்க்கூத்துக்கு அஞ்சிய அந்த நாய், பூமியில் ........................ (பெருகி, பெறுகி) வரும் மழைநீரில் தாவிக் குதித்துக் ........................(குறைத்து, குரைத்து)க் கொண்டே தன் எஜமானின் வீடு நோக்கி நொண்டி நொண்டி ஓடிற்று.

### போட்டி. இல - 67இன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 க | ன் | னி | 2 யா | ■ | 3 ரை |
| ஹ | ■ | ■ | 4 ம | 5 ரு | உ |
| 6 வ | ல | 7 க | ம் | பா | ■ |
| த் | ■ | ல | ■ | ய் | 8 பொ |
| 9 தை | ரி | ய | ம் | ■ | றா |
| ■ | ■ | ம் | ■ | 10 இ | மை |

**பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்**

எஃப்.ரிஸ்வியா, தரம் - 8, கு/ஆமினா மு.வித்., நாகலகமுவ.


ஜெ.தம்பிகா, தரம் - 11, கராகொடை மு.ம.வித்., எட்டியாந்தோட்டை.

சக்காஃப் ஹுசைன், தரம் - 9A, அல்-ஹம்றா ம.வித்., தோப்பூர்.

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 56 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி : 01 | போட்டி : 02 | போட்டி : 03 | போட்டி : 04 | போட்டி : 05 (குறு.போ-67) |
|---|---|---|---|---|
| எம்.ஃபர்சாத், தரம் - 5B, களு/ரஹுமானியா மு.ம.வித்., வெலிப்பென்ன. | பஸால் அஹமட், தரம் - 7B, ஸாஹிரா தே.பாட., ஹம்பந்தொட்டை. | அஸீமா ஜிப்ரி, தரம் - 9T, பெண்கள் உயர்தர பாட., கண்டி | ஏ.அனிஸ்டா, தரம் - 11, தி/விபுலானந்தா கல்., திருகோணமலை. | எ.சங்கீத், தரம் - 8C, மெதடிஸ்த ம.கல்., மட்டக்களப்பு. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோட்டே படையின் கொடூர செயல்பாடு

## வரலாற்றிலிருந்து..

**அத்தியாயம் 48**

**1** கோட்டே படையினர் சீதாவாக்கை நகரை முற்றாக நிர்மூலமாக்கினர். கோவில்களை அழித்தனர். அரச மாளிகையை முற்றாகக் கொள்ளையடித்தனர். மிருகங்களையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. இதனால், விரக்தியடைந்த கோட்டே மக்கள் தர்மபால மன்னனை வெறுத்தொதுக்கத் தொடங்கினர். மாயாதுன்னை மன்னனின் பக்கம் சேர்ந்து கொண்டனர். கோட்டே மக்களில் அநேகர் கோட்டேயைக் விட்டு சீதாவாக்கை இராச்சியத்திற்குரிய பகுதிகளில் குடியேறத் தொடங்கினர்.

**2** மக்கள் மயாதுன்னை மன்னன் பக்கம் சேர்ந்து கொண்டமை கோட்டே படையை அதிகம் பாதித்தது. உணவின்றி மிகவும் கஷ்டப்பட்டனர். தம்மால் முடிந்த இழிவான வேலைகள் எல்லாம் செய்த பின்பு கோட்டே படைகள் தம் இருப்பிடம் திரும்பினர். மக்களின் மனமாற்றத்தைக் கண்ட தர்மபால மன்னன் மிகவும் பயந்தான். மாயாதுன்னை மன்னனைக் கைது செய்யும் வரை தான் கிறிஸ்தவ மதத்தைத் தழுவப் போவதில்லை என போர்த்துக்கேயருக்குத் தெரிவித்தான்.

**3** இதனை கோட்டே மக்கள் பொருட்படுத் தாமல் தொடர்ந்து சீதாவாக் கைக்கு குடியேறச் சென்றனர். இத்தகைய நிலையில் பதிலரசன் நொரொஞ்ஞோ தொடர்ந்தும் புவனேகபாகு மன்னனின் செல்வங்களைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டான். எந்தப் பயனுமற்ற நிலையில் கோட்டே இராச்சியத்திலிருந்த அதிகார பலமிக்கவர்களிடம் தேடத் தொடங்கினான். பிரதானிகளை சிறையிலிட்டான்.

இதைக் கேள்விப்பட்ட சேனாதிபதி வீதிய பண்டார தப்பியோடினான்.

எழுதுபவர் : திலகன்
சித்திரம் : அபயன்

**4** கோவா பதிலரசன் நொரொஞ்ஞோ தம்மிட மற்றும் பண்டிதரால இருவரையும் பிடித்துக் கொண்டான். வயதில் குறைந்த மன்னன் தனியாக நிர்வாகத்தைக் கொண்டு நடாத்தப் போர்த்துக்கேயர் விடவில்லை. இந்நிலையில் மாயாதுன்னை மன்னனைப் பற்றிய செய்தி எதுவும் பதிலரசனுக்குக் கிட்டாதவகையில் மாயாதுன்னை எங்கோ ஒளிந்திருந்தான். இக்காலப்பகுதியில் இந்தியாவில் போர் ஆரம்பமாகியிருந்தது.


**5** இந்நிலையில் பதிலரசன் தம்மிட மற்றும் பண்டிதராலவைப் பிடித்துக் கொண்டான். இளவயது மன்னன் தனியாக நிர்வாகத்தைக் கொண்டு நடாத்த இடம் கொடுக்காமல் போர்த்துக்கேயப் படைகளை பதிலரசன் கொழும்பிற்கு அனுப்பி வைத்தான். யாருடைய உதவியுமின்றி இருந்த தர்மபால மன்னன் தன் மாமனான தம்மிடராலவைக் காப்பாற்ற முயற்சி எடுத்தான். தன் மாமனை திருப்பித் தருமாறு பதிலரசனிடம் மன்னன் கேட்டுக் கொண்டான். அவருக்குப் பதிலாக இறந்து போன புவனேகபாகு மன்னனின் மகன் ஒருவனைத் தருவதாக இணக்கம் தெரிவித் தான்.

**6** இந்தச் செய்தியைக் கேட்ட புவனேகபாகுவின் மகன் பயந்து ஓடி ஒளிந்தான். அவ் இளவரசனைத் தேடிக் கண்டுபிடிக்க தர்மபால மன்னன் அதிக முயற்சிகளை செய்தபோதும் கண்டுபிடிக்க முடியவில்லை. திரும்பவும் கல்நெஞ்சம் கொண்ட பதிலரசன் மாமன் தம்மிடவைக் கொண்டு செல்ல ஆயத்தமானான். இந்நிலையில் மறைந்திருந்த இளவரசனை மன்னன் கண்டுபிடித்து பதிலரசனிடம் ஒப்படைத்து தன் மாமனைக் காப்பாற்றினான்.

**7** இந்தப் போர்த்துக்கேயத் தலைவன் அதிக பேராசை கொண்டவனாக இருந்தான். அதுபோல் மனிதாபிமானமற்ற கொடுங்கோலனாகவும் இருந்தான். போர்த்துக்கேய மன்னனின் நிபந்தனைகளையும் மீறினான். கீழ்படிவற்றவனாக மாறினான். தர்மபால மன்னனை போர்த்துக்கேய மன்னன் பாதுகாப்பதாக வாக்களித்திருந்தான்.

**8** ஆனாலும், அனைத்தையும் பதிலரசன் மீறினான். அதுமட்டுமன்றி தர்மபால மன்னனுக்குச் சொந்தமான செல்வங்கள் அனைத்தையும் கொள்ளையடித்தான். ஒரு நல்ல களஞ்சியப் பொறுப்பாளனாக இருந்த போர்த்துக்கேயனையும் தண்டித்தான்.

(தொடரும்..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்திரம்

கதை, சித்திரம்
திசா
9




(தொடரும்)

## உங்களுக்குத் தெரியுமா?

வேணு வாரியத்

### ரத்தம் குடிக்கும் வெளவால்!

தென் அமெரிக்காவில் உள்ள அடர்ந்த மழைக் காடுகளில் ரத்தம் குடிக்கும் வெளவால்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொரு நாளும் 300 கிராம் அளவுக்கு ஏதாவது விலங்குகளில் இருந்து ரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கின்றன. குறிப்பாக மாடுகளின் ரத்தத்தை இந்த வெளவால்கள் விரும்பிக் குடிக்கும்.



### சிறிய மீன்

'டுவார்ஃ கோபி' என்ற மீன்தான் உலகிலேயே மிகவும் சிறிய மீன். இந்த மீன், ஒரு காபிக்கொட்டை அளவுதான் இருக்கும்.



### மாண்ட்ரில்

குரங்கு வகைகளில் மாண்ட்ரில் என்ற மனிதக் குரங்குதான் மிகப்பெரியது. மேற்கு ஆப்பிரிக்காவில் வசிக்கும் இந்த வகைக் குரங்குகள், 6 அடி உயரமும் 50 கிலோ எடையும் கொண்டவை.



### தெரிந்து கொள்ளுங்கள்

இந்த உலகில், நறுமணம் வீசும் பூக்கள் நிறைய உண்டு என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால், நறுமணம் வீசும் வண்ணத்துப் பூச்சிகளும் இருப்பது உங்களுக்குத் தெரியுமா? பிரேஸில் நாட்டில் உள்ள சில வண்ணத்துப் பூச்சிகள் மீது சாக்லேட் வாசனை அடிக்கும்!



### பறக்கும் அணில்



இந்த உலகில் சுமார் 35 வகையான பறக்கும் அணில்கள் உள்ளன. அவை பெரும்பாலும் தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியாவின் சில பகுதிகளில் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 2. இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு [illegible] 2006 ஜூலை மாதம் 05ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on July 05, 2006